


இடை இடையில் இயற்கைக்கு உதவுதல் இன்றியமையாதது !

தேகம் இயற்கையாக எச்சரிக்கும்போது சிரத்தை காட்டுவது அவசியம். தலை கனப்பதும், கண்கள் ஒளி யிழப்பதும், தேகத்தில் சுறுசுறுப்புக் குறைவதும், குடலிலுள்ள அசுத்தங்கள் சரிவர பிரவிருத்தியாகாமல் இருப்பதனால் தான். போனோமின்ட் உட்கொள்ள வேண்டிய அவசியத்தை அறிவுறுத்துகிறது. கிரமமாக குடலை சுத்தி செய்துகொள்வது உங்கள் சுகவாழ்விற்கு இன்றியமையாதது என்பதை மறவாதீர்கள்.

சுத்தமாக மலமிளக்கும் உன்னத சஞ்சீவி

ரூ. 1-2-0, ரூ. 0-7-0 ஆகிய இரு சைஸ்களில் எங்கும் கிடைக்கும்

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜெண்டுகள் :


**ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி,
99-A, அரமனைக்காரத் தெரு, சென்னை**

BONOMINT
LAXATIVE
CHEWING GUM

No. 5.



Wings to your Message



உங்கள் கடிதங்களையும், பார்ஸல்களையும், சீக்கிரம் தகுந்த இடம் சேர்ப்பிக்க, உங்கள் சேவகர்களுக்கு ஹிண்ட் சைக்கிள்கள் வாங்கிக்கொடுங்கள்.

HIND *India's Own*

தயாரிப்போர்கள்: ஹிண்ட் ஸைகிள்ஸ் லிட்.

சென்னை இராஜதானிக்கு (சுதேச ஸமஸ்தானங்கள் உள்பட)
சோல் ஏஜண்டுகள்: டி லக்ஸ் ட்ரேடிங் கோ., பாலக்கரை, திருச்சி
பிராஞ்சு : 11, பிராட்வே, சென்னை.

கல்கி
பொருளடக்கம்

மலர் 6 இதழ் 44	1947 ஜூன் 1	சர்வஜித்ஹு வைகாசி 18

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

நமது அரும் பெரும் தேசியத் தலைவர்களில் சங்கீதம், நடனம் முதலிய கலைகளிலே ஆர்வமுடையவர்கள் அதிகம் பேரில்லை. நம் தலைவர்களிலே சிலர் "ஸ்வரத்தைக் காட்டிலும் அபஸ்வரம் மேலானது தானே? இரண்டு எழுத்து அதிகம் அல்லவா?" என்று கேட்கக் கூடியவர்கள். "தேசம் பூரண சுதந்திரமடையவில்லை; சங்கீதக் கச்சேரி என்ன வேண்டிக் கிடக்கிறது?" என்று எரிந்து விழுகிறவர்களும் உண்டு. நமது தலைவர்களில் பலர் ஸினிமாக் கொட்டகையின் பக்கமே போவது கிடையாது. எனவே, ஸினிமா என்பது பொது மக்களை உயர்த்துவதற்கோ, தாழ்த்துவதற்கோ எவ்வளவு அபார சக்தி பொருந்திய ஸ்தாபனம் என்பதும் அவர்களுக்குத் தெரியாது.



பாரதத்தாயின் தவப் புதல்வரும், பாரத மக்களின் மாபெரும் தலைவருமான ஜவாஹர்லால்ஜி, மேற்படி 'ஆண்டி—கலை'க் கோஷ்டியைச் சேர்ந்தவர் அல்ல. இந்திய தேசத்தின் பரம ரஸிக சிகாமணிகளில் ஜவாஹர்லால்ஜி ஒருவர். "இங்கிலீஷ்காரனை இந்தியாவை விட்டுப் போகச் சொல்வதற்கு முன்னால், அவன் கொண்டுவந்த ஹார்மோனியம் என்னும் பயங்கர வாத்தியத்தை விரட்டியடிக்கவேண்டும்!" என்று நெடு நாளைக்கு முன்னாலேயே புஸ்தகத்தில் எழுதியவர்.

எவ்வளவோ பரம முக்கியமான அரசியல் பிரச்னைகளில் ஈடுபட்டிருக்கும் பண்டித ஜவாஹர்லால் நேரு, சென்ற மே மாதம் 18-ல் புதுடில்லியில் ஸ்ரீமதி. எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் சங்கீத கச்சேரியைக் கேட்பதற்கு அவகாசம் ஏற்படுத்திக் கொண்டுவந்து கச்சேரியைக் கேட்டு மகிழ்ந்தார் என்னும் செய்தி தமிழ்நாட்டு ரஸிகர்களுக்கெல்லாம் குதூகலத்தை அளிக்கும். எம். எஸ். ஸின் இன்னிசையைக் கேட்டு பண்டித ஜவாஹர்லால்ஜி எவ்வளவு ஆனந்தமடைந்திருக்க வேண்டும் என்பதை நமது அட்டைப் படத்தில் அவருடைய முகம் எப்படி மலர்ந்து விளங்குகிறது என்பதைப் பார்த்து அறிந்து கொள்ளலாம். இந்தக் கச்சேரியை ஏற்படுத்துவதற்குக் காரணமாயிருந்த கவியரசி ஸரோஜினியின் திருமுகத்திலோ பெருமிதமும் எக்களிப்பும் போட்டியிட்டுத் தாண்டவமாடுகின்றன. இத்தகைய பாக்கியம் தமக்குக் கிடைத்தது பற்றி ஸ்ரீமதி எம். எஸ். குதூகலமடைந்திருப்பதில் வியப்பு ஒன்றும் இல்லையல்லவா?


லீலா சிட்னிஸ்
தினமும் லக்ஸ்
டாய்லட் சோப்பினால்
அழகுபடுத்திக்கொள்ளும்
முறையை காண்பிக்கிறார்
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின் மேல் தடவுகிறேன்..
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்..
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டினால் முகத்தை துடைக்கிறேன்
LUX
LUX TOILET SOAP
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்
வசீகரமான சருமம் ஒரு ஸினிமா நட்சத்திரத்திற்கு மிகவும் முக்கியமானது. நீங்களும் உங்களுடைய கட்டழகை மதித்தால் உங்களுக்கும் அது அவசியமே. இந்தியாவில் முன்னணியிலுள்ள ஸினிமா நட்சத்திரங்களின் அருமையான மேனியை காப்பாற்றும் இனிய பாதுகாப்பு முறையை ஏன் உங்கள் சருமத்திற்கு அளிக்கக்கூடாது? இந்த சுலபமான அழகுபடுத்தும் முறையை நீங்களே 30 நாட்கள் கையாளுங்கள் — லக்ஸ் டாய்லட் சோப்பின் வெண்மையான சுகந்த நுரையை பிரியப்படுவீர்கள். அது சருமத்தை குளுமையாகவும், மழமழப்பாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்ளுகிறது.
LTS. 153-23-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 44

என்ன சேதி?

ஊதிக் கெடுத்தான் ஆண்டி.

"சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி" என்பது பழமொழி.

இதுவரை முஸ்லீம்கள் மைனாரிட்டிகளாக உள்ள மாகாணங்களிலே, அவர்கள் தங்கள் ஜனத் தொகை விகிதாசாரத்துக்கு அதிகமாகவே சர்க்காரில் உத்யோகம் பெற்று வந்தார்கள்.

உதாரணமாக, சென்னை மாகாணத்தில் 100-க்கு 9-பேர்தான் முஸ்லீம்கள். ஆனால், சர்க்கார் உத்யோகங்களில் 30 சதவிகிதம் அவர்களுக்குக் கிடைத்து வருகிறது. இதே மாதிரி பம்பாய், ஐக்கிய மாகாணம் முதலிய மற்ற மாகாணங்களிலும் முஸ்லீம்கள் தங்கள் ஜனத் தொகைக் கணக்கைவிட அதிகமாகவும் தாராளமாகவும் உத்யோகங்கள் பெற்று வந்தார்கள்.

ஆனால், இப்போது சிந்து சர்க்கார் சும்மா கிடந்த சங்கை எடுத்து ஊதிக் காரியத்தைக் கெடுத்து விட்டார்கள்.

இந்தியாவிலே பாகிஸ்தான் வந்தாலும் வராவிட்டாலும் சிந்து மாகாணத்திலே பாகிஸ்தான் தர்பாரை நடத்தியே காட்டிவிடுவது என்று சிந்து சர்க்கார் கொஞ்சகாலமாக ஹிந்துக்களுக்கு விரோதமாகச் செய்து வரும் காரியங்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அவர்கள் ஹிந்துக்களுக்கு இனிமேல் ஜனத்தொகை விகிதாசாரப்படிதான் கண்டிப்பாக உத்தியோகங்கள் கொடுக்கப்படும் என்று முடிவு செய்தார்கள்.

சிந்து சர்க்கார் இம்மாதிரிச் செய்ததைப் பார்த்ததும், ஐக்கிய மாகாண சர்க்காரும் அதே முறையைத் தங்கள் மாகாணத்திலும் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது முஸ்லீம் மைனாரிட்டிக்கு ஜனத் தொகை விகிதாசாரப்படிதான் உத்யோகம் கொடுப்பதென்று முடிவு செய்திருக்கிறார்கள். இதைப் பார்த்து, "ஐயையோ! இதனால் முஸ்லிம்களுக்குப் பெரும் பாதகம் அல்லவா நேரும்" என்று சிந்து பிரபல முஸ்லிம் லீகர் ஒருவர் பிரலாபிக்கிறார்.


என்ன செய்வது, ஊதிக் கெடுத்ததன் விளைவை அனுபவித்துத்தானே தீர வேண்டும்!

என்ன செய்ய முடியும்?

கொஞ்ச நாளைக்கு முன்பு அமெரிக்காவில் ஒரு வெள்ளைக்கார டாக்ஸி டிரைவரைக் கொன்றுவிட்டதாக ஒரு நீக்ரோ மேல் சந்தேகப்பட்டு அவன்மீது வழக்குத் தொடர்ந்தார்கள். வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்த போதே சிறையிலிருந்த மேற்படி நீக்ரோவை 28 வெள்ளையர்கள் வெளியே தூக்கிக்கொண்டு போய்ச் சித்திரவதை செய்து, கொன்றும் விட்டார்களாம். பின்பு அந்த வெள்ளையர்கள் மீது கொலைக் குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்பட்டது. பத்து நாள் விசாரணையும் நடந்தது. முடிவில், அவர்கள்மேல் கொஞ்சங்கூடக் குற்றம் இல்லையென்று வெள்ளைக்கார ஜூரிகள் ஒருதலைப் பட்சமாக முடிவு செய்து அந்தக் கொலைஞர்களை விடுதலையும் செய்தார்கள். அப்படி விடுதலை செய்ததற்கு அவர்கள் தங்கள் தீர்ப்பில் ஒரு காரணமும் சொல்லவில்லை.

நிறவெறி பிடித்த அத்தனை கோடி அமெரிக்கர்களுக்கு மத்தியிலே நல்ல மனிதர் ஒருவராவது இருக்கமாட்டாரா? அமெரிக்க அட்டர்னி ஜெனரலான டாம் கிளார்க் என்பவர் மேற்படி விடுதலையைக் கடுமையாக எதிர்த்திருக்கிறார். "நான் அட்டர்னி ஜெனரலாக இருக்கும் வரை, வெள்ளையராயினும் சரி, கறுப்பராயினும் சரி—நம்முடைய மக்கள் அனைவருக்கும் நீதி கிடைக்கும்படி பார்த்துக் கொள்வேன்" என்று ரொம்ப ஆத்திரத்துடன் சொல்லியிருக்கிறார். பாவம், அத்தனை கோடி அமெரிக்கர்களுக்கு மத்தியில் அவர் ஒருவர் என்ன செய்ய முடியும்?

வருகிறது கடைசி வட்டமேஜை!



மாயப் பொய்கை!

ஓர் ஊரில் ஆமை ஒன்றைச் சிலர் அடித்துக் கொண்டிருந்தார்கள். ஆமை முதுகு ஓட்டின்மீது எத்தனை அடிகள் அடித்தாலும் அதற்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது என்பது மேற்படி பிருகஸ்பதிகளுக்குத் தெரியாது.

அந்தச் சமயத்தில் அந்த ஆமைக்கு யமனாக ஒரு வழிப்போக்கன் வந்து சேர்ந்தான்.

'ஜீவகாருண்யம்' ததும்பும் ஹிருதயம் படைத்த அவன், "சிவா, சிவா! ஜீவஜந்துக்களை ஹிம்சிப்பது மகா பாவம்" என்று சொல்லிக் கண்களை மூடிக் கொண்டான்.

அவன் மீண்டும் கண்களைத் திறந்த போது, ஆமையை அடித்தவர்கள் மனம் வருந்தித் தங்கள் தவறை உணர்ந்து திரும்பிச் செல்ல யத்தனித்தனர்.

அத்துடன் வழிப்போக்கன் வாளாவிருந்திருந்தால், ஆமை உயிர் தப்பி ஓடியிருக்கும்.

"ஆமையைத் திருப்பிப் போட்டு வயிற்றுப்புறத்தில் அடித்தால்தான் அது செத்துப் போகும்" என்று வழிப்போக்கன் ஒரு போடு போட்டு வைத்தான்.

திரும்பிப் போனவர்கள் வழிப்போக்கனும் தங்களுடைய நண்பன் என்பதைத் தெரிந்து கொண்டு மீண்டும் வந்து அந்த ஆமையை விண்ணுலகுக்கு அனுப்பி விட்டார்கள்.

* * *

இன்று பிரிட்டிஷாரின் போக்கு மேற்படி வழிப்போக்கனின் நிலைமையையே ஒத்திருக்கிறது.

இந்தியாவைப் பிளப்பதென்பது கனவிலும் கருத முடியாத விஷயம் என்று இந்தியாவுக்கு வந்த மந்திரி சபை கோஷ்டியினர் கூறினார்கள். இந்தியா ஐக்கிய இந்தியாவாகவே திகழவேண்டும் என்றும் பிரமாணம் செய்தார்கள்.

இந்தியாவைப் பிளப்பது அதன் முன்னேற்றத்துக்கு மாத்திரமல்ல, சர்வதேச சமாதானத்துக்கும்கூட ஆபத்தாகும் என்றார்கள்.

அதே மூச்சில், பல்வேறு கோஷ்டிகளையும் சிருஷ்டித்து அவைகளுக்கு ஐக்கிய இந்தியாவிலிருந்து பிரிந்து செல்ல உரிமை உண்டு என்றும் சொல்லிவிட்டார்கள்!

எனவே, இந் நிலைமையில் இந்தியா ஐக்கியத் திட்டத்தின் கதி, மேற்படி ஆமையின் கதியாவதைத் தவிர வேறென்ன வழி இருக்கிறது?

* * *

"காரியங்கள் எல்லாம் இவ்வளவு விபரீதமாக நடைபெறும் என்பது எங்களுக்குத் தெரிந்திருந்தால், நாங்கள் பதவியையே ஏற்றுக்கொண்டிருக்க மாட்டோம்."

இவ்வாறு பண்டித ஜவாஹர்லால் நேரு மனம் உடைந்து கூறியிருக்கிறார்.

"பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறிய பின்னர்தான், இந்தியாவின் எதிர்கால அரசியலை உருவாக்க முடியும். பிரிட்டிஷார் இங்கு இருக்கும் வரையில் எத்தகைய முயற்சியும் உருப்படப் போவதில்லை" என்று மகாத்மா காந்தியும் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே, பிரிட்டிஷாரின் அந்தரங்க சுத்தியில் நம் தலைவர்களுக்கு நம்பிக்கை குறைந்து வருகிறதென்பது நன்கு தெரிகிறது.

இந்தியப் பிரச்னையைத் தீர்க்கும் விஷயமாக வைஸ்ராய் லார்டு மவுண்ட்பாட்டனுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் பூரண அதிகாரம் அளித்திருப்பதாயும், மவுண்ட்பாட்டன் இந்தியப் பிரச்னையைச் சமாளிக்கும் விஷயமாகக் காட்டிவரும் புத்திசாலித்தனத்தில் பிரிட்டிஷ் சர்க்காருக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டு விட்டதாயும் பத்திரிகைச் செய்திகள் வர்ணிக்கின்றன.

இந்தியாவைத் துண்டாடுவதா? துண்டாடுவதாயின் எப்படித் துண்டாடுவது?

இவை போன்ற விஷயங்களை யொட்டி நாளை டில்லியில் ஆரம்பமாகும் வட்டமேஜை மகாநாட்டில் ஒரு முடிவு ஏற்பட்டு விடும் என்றும் கூறப்படுகிறது.

எனவே, இச் சந்தர்ப்பத்தில் நம்பிக்கையுடனிருக்க வேண்டிய தலைவர்கள், எதிர்காலத்தில் என்ன நேருமோ என்று கலங்குவதற்குக் காரணம் என்ன என்பதைக் கவனிக்க வேண்டியது அவசியமாகும்.

* * *

பிரிட்டிஷார், பல் வேறு வியாக்யானங்களுக்கும் இடமின்றித் தங்களுடைய அறிக்கைகளைத் தயாரித்திருந்தால், பல இன்னல்கள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

1948-ம் வருஷம் ஜூன் மாதத்துக்குள் தாங்கள் வெளியேறுவதாக பிரிட்டிஷார் விடுத்த அறிக்கையிலாவது அவர்கள் பொடி வைக்காமல் இருந்தார்களா?

1948 ஜூன் மாதம் அதிகாரத்திலிருக்கும் சர்க்காரிடமாவது சர்க்கார்களிடமாவது அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு வெளியேறுவோம் என்று பிரிட்டிஷ் சர்க்கார் குறிப்பிட்டதுதான் அனர்த்தமாக முடிந்தது.

அந்த வார்த்தைகள் பாக்கிஸ்தான் பக்தர்களுக்குத் தூபம் போட்டு விட்டன.

எனவே, ஜின்னா சாயபுவின் "நேர் நடவடிக்கை" அறிக்கையால் எவ்வளவு பாதகங்கள் ஏற்பட்டனவோ, அவற்றைக் காட்டிலும் அதிகமாக மேற்படி பிரிட்டிஷ் அறிக்கையினால் ஏற்பட்டு விட்டன.

மந்திரிகள் கோஷ்டி தயாரித்த திட்டப்படி கண்டிப்பாக நடந்து கொள்ளுவதென்று பிரிட்டிஷ் சர்க்கார் முடிவு செய்திருப்பார்களாயின், பல தொல்லைகள் முளையிலேயே அழிந்து போயிருக்கும்.

தவிர, மந்திரிகள் கோஷ்டித் திட்டப்படி இடைக்கால தேசிய சர்க்காரில் இடம் பெற்ற லீக்கர்கள், அரசியல் நிர்ணய மகாசபைக்கும் வந்திருக்க வேண்டும். அச் சபைக்கு வர விரும்பாதவர்களுக்கு இடைக்கால சர்க்காரிலும் இடம் கிடையாது என்று பிரிட்டிஷ் சர்க்கார் கண்டிப்பாக அறிவித்திருப்பார்களாயின், மேற்படி சர்க்காரில் லீக்கர்கள் உள்ளூர துரோகம் செய்து வரும் விபரீதமாவது தவிர்க்கப்பட்டிருக்கும்.

நிராத் தொல்லைகளைத் தடுக்க பிரிட்டிஷ் சர்க்கார் எதுவுமே செய்யாததுடன், ஆய்ந்தோய்ந்து உருவான தங்களுடைய திட்டத்தைக் கூட, தடியெடுத்தவர்களின் கோரிக்கைக்கு இணங்க மாதத்துக்கு ஒரு முறை மாற்றிக் கொண்டு வந்தனர்!

அதன் விளைவாகவே பாக்கிஸ்தான் கோரிக்கை வலுப் பெற்றது.

எப்படியாவது தேசத்தில் பாதகங்களும் படுகொலைகளும் நின்று சாந்தியும் சமாதானமும் நிலவினால் போதும் என்ற நோக்கத்துடன் காங்கிரஸ் தலைவர்களும் அநீதியான அந்தக் கோரிக்கைக்குக் கூட இணங்க முற்பட்டனர்.

தம்முடைய பகற்கனவான பாக்கிஸ்தானம் பலிக்கப் போவதைக் கண்டு ஜின்னா சந்தோஷமடைந்து, மேற்கொண்டு தேசத்தில் சமாதானம் நிலவுவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டால், எவ்வளவோ மேன்மையாக இருந்திருக்கும்.

ஆனால், பண்டித ஜவாஹர்லால் நேரு கூறியிருப்பது போல், ஜனாப் ஜின்னா சமரசம் எதையும் விரும்புவதாகத் தெரியவில்லை.

* * *

வங்காளத்தையும் பாஞ்சாலத்தையும் பிரித்தால் முறையே அங்குள்ள ஹிந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் தான் சகிக்க முடியாத கஷ்டங்கள் ஏற்படும் என்று ஜின்னா கண்ணீர் வடிக்கிறார்.

நவகாளியிலும் மற்ற இடங்களிலும் படுகொலை செய்யப்பட்டு வரும் ஹிந்துக்களுக்காக ஜின்னா ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விட்டதாகத் தெரியவில்லை. கொலையுண்டு போகாமல் தப்பியவர்கள் வீடு வாசல்கள், சொத்து சுதந்திரம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அடைக்கலம் புகுவது எங்கே என்று ஏங்கி வருவதைக் குறித்தும் ஜின்னா சாயபு ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டதாகத் தெரியவில்லை.

பாஞ்சாலத்தில் பாதகச் செயல்களால் பரிதவிக்கும் சீக்கியர்கள் பற்றி ஜின்னா ஓர் அனுதாப வார்த்தை கூட கூறவில்லை.

அப்படியிருக்க பாஞ்சாலத்தையும், வங்காளத்தையும் பிரித்தால் அங்

குள்ள சீக்கியர்களும் ஹிந்துக்களும் அதிக கஷ்டத்துக்கு உள்ளானார்களே என்று இப்போது லீக் தலைவர் வடிக்கும் கண்ணீர் எந்த ரகத்தைச் சேர்ந்தது என்பதுதான் தெரியவில்லை!

மற்றும் பலாத்காரத்தையும் படுகொலைகளையும் கைவிடும்படி ஜின்னா தமது சீடர்களுக்கு விடுத்த வேண்டுகோள், ஏட்டுச் சுரைக்காயாக முடிந்திருப்பது பற்றியும் ஜின்னா ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை.

* * *

ஜனங்களைப் பரிவர்த்தனை செய்து கொள்ள வேண்டும் என்ற முற்றிலும் அனுஷ்டான அசாத்தியமான ஒரு யோசனையையும் லீக் தலைவர் சமீபத்தில் கிளப்பினார்.

ஆனால், இப்போது ஏதாவது ஒரு வித சமரசம் ஏற்படும் தறுவாயில், உலகமே பிரமிக்கக்கூடிய மற்றொரு பூச்சாண்டியையும் ஜின்னா கிளப்பி விட்டிருக்கிறார்.

“கிழக்கு பாக்கிஸ்தானத்தையும் மேற்கு பாக்கிஸ்தானத்தையும் இணைக்கும் பாதை ('காரிடார்') ஒன்று வேண்டும் என்று தாங்கள் கேட்பீர்களா?”

இவ்வாறு ராய்ட்டர் நிருபர் ஜின்னாவிடம் சென்ற வாரம் ஒரு கேள்வியைப் போட்டு வைத்தார்.

ஜின்னாவும் சிறிதும் கூசாமல் மேற்படி கேள்விக்கு “ஆமாம்” என்று பதில் அளித்திருக்கிறார்.

கிழக்கு பாக்கிஸ்தானத்தையும் மேற்கு பாக்கிஸ்தானத்தையும் இணைக்க 'காரிடார்' கோருவதைக் காட்டிலும் கலப்பற்ற மடத்தனம் வேறெதுவும் இருக்க முடியாது என்று பண்டித நேரு, ராஜாஜி, சர்தார் பட்டேல், ராஜேந்திரபாபு முதலிய சகல தலைவர்களும் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

மேற்கு பாக்கிஸ்தானத்திலிருந்து கிழக்கு பாக்கிஸ்தானத்துக்குச் செல்ல, பாஞ்சாலம், டில்லி, மத்திய மாகாணம், பீகார், வங்காளத்தின் ஒரு பகுதி இவை வழியாக, அதாவது சுமார் 1200 மைல் நீளத்துக்கு ஒரு பாதை கேட்கிறார் ஜின்னா சாயபு!

அவர், மற்றப் பிரதேசங்களுடன் சினேக பாவமாக இருப்பதாயின், அத்தகைய பாதை கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டே இராது.

தேசத்தைப் பிளப்பது, ஜனங்களைப் பரிவர்த்தனை செய்து கொள்ளுவது, ராணுவப் பிரிவினை, 'காரிடார்' கோரிக்கை இவற்றிற்கெல்லாம் ஒரே ஒரு முடிவுதான் உண்டு.

அதுதான் முடிவில்லாத உள்நாட்டு யுத்தமாகும்.

ஜனாப் ஜின்னாவின் 'காரிடார்' கோரிக்கை பற்றி ராஜாஜி கூறியுள்ள அபிப்பிராயம் இதுதான்:

“இத்தகைய கலப்பற்ற அநியாயமான நிபந்தனைகள்தான் லீக்கின் கோரிக்கையையே வெறும் கேலிக் கூத்தாக்கி விடுகின்றன. முஸ்லிம் லீக் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாக தன் கனவிலிருந்து விழித்துக்கொண்டு பகல் வெளிச்சத்துக்கு வந்து தனது அபிலாஷைகளைச் சீர்படுத்திக் கொள்ளுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. இந்த விபரீதம் காலவரையறையின்றி நடந்து வந்திருக்கிறது. இனியாவது இதற்கு முற்றுப்புள்ளி வைத்தே தீரவேண்டும். இத்தகைய மடத்தனமான அற்ப விஷயங்களையொட்டி இந்தியா மேற்கொண்டு காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்க முடியாது. நாட்டில் ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலைநிறுத்த வேண்டியது வெகு அவசரம். அப்படியானால்தான், கோடிக் கணக்கான மக்களைக் கலங்க வைத்துள்ள பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்க பொறுப்புள்ள சர்க்கார்கள் முற்படமுடியும். கோடிக் கணக்கான தங்கள் தேச மக்களையே எதிர்த்துப் போராடுவதற்காக சர்க்கார்களை அமைப்பதால் எதுவும் உருப்பட முடியாது” என்று ராஜாஜி லீக்கின் விபரீதத்தை ஆணித்தரமாகக் கண்டித்திருக்கிறார்.

ஜின்னாவின் 'காரிடார்' கோரிக்கையைப் போல் வேறெதுவும் நமது மாபெரும் தலைவர்களையும் இந்திய மகா ஜனங்களையும் இவ்வளவு தூக்கி வாரிப் போட்டதில்லை.

ஆனால், 'காரிடார்' கோரிக்கை ஓர் உண்மையைச் சந்தேகமின்றி வெளிப்படுத்தியிருக்கிறது. அதாவது, லீக்கின் அநியாயமான கோரிக்கைகளுக்கு முடிவில்லை என்பதுதான்.

ஆகையால், இனியும் முஸ்லிம் லீக்கைத் திருப்தி செய்ய முற்படுவது, பாலைவனத்தில் தோன்றும் மாயப் பொய்கையைத் தேடிச் செல்லுவது போல் வியர்த்தமாகவே முடியும்.

புது டில்லியில்

★★★★ மீரா ★★★★

கவி அரசி சரோஜினிதேவியின் வாழ்த்து

[நமது புது டில்லி நிருபர்]

வைஸ்ராய் மவுண்ட் பேட்டன் இங்கிலாந்துக்குப் புறப்படும் தறுவாயில் பண்டித ஜவாஹர்லால்ஜியைப் பார்த்துச் சொன்னார்:—"உங்கள் அரசியல் சிக்கல் என்னை ரொம்ப அவஸ்தைப்படுத்துகிறது. மனதில் நிம்மதியோ, உற்சாகமோ இல்லை. கவலை பிடுங்கித் தின்கிறது!"

இவ்விதம் சொன்ன வைஸ்ராய் மவுண்ட் பேட்டனுக்கு ஜவாஹர்லால்ஜி கூறிய பதிலாவது:—

"[illegible]தென்னிந்தியாவி லிருந்து ஸ்ரீமதி எ[illegible]ஸ். சுப்புலக்ஷ்மி புது டில்லிக்கு வரப் [illegible]ர்கள். அவருடைய கானத்தைக் [illegible] உங்களுடைய மனச் சோர்வும் [illegible]ம் தீர்ந்து போகும். ஆனால் நீ[illegible]ன் சீமைக்குப் புறப்பட்டுக்கொண் டிரு[illegible]றீர்களே?"

வைஸ்ராய் மவுண்ட் பேட்டனுக்கும் ஜவாஹர்லால்ஜிக்கும் மேற்கண்டவாறு சம்பாஷணை நடந்ததாகப் புது டில்லி வட்டாரங்களில் சொல்லிக் கொள்ளப் படுகிறது.

இது எப்படியானாலும், ஜவாஹர்லால்ஜி வைஸ்ராய்க்குக் கூறியதாகச் சொல்லப் படும் யோசனையைத் நாம் கடைப்பிடிக்கத் தவறவில்லை. புது டில்லியில் மே மாதம் 18ந் தேதி நடந்த எம். எஸ். ஸின் கச்சேரிக்குப் பண்டித ஜவாஹர்லால்ஜி விஜயம் செய்தார். அவரோடு ராஜாஜி, சின்ஸ்தானீகர் லோரியா ஹான், டாக்டர் பி. ஸி. ராய், ஸ்ரீ தேவதாஸ் காந்தி, முதலியவர்களும், மற்றும் தென்னிந்தியப் பிரமுகர்கள் சுமார் 200 பேரும் வந்திருந்தார்கள். இந்தக் கச்சேரி, லாலா ஸ்ரீராம் அவர்களின் மாளிகையில் கவியரசி சரோஜினி தேவியினால் ஏற்பாடு செய்யப் பட்டு நடந்தது.

கச்சேரியை "வண்டாடும் சோலை" என்னும் தமிழிசை ரிக்கார்த்துடன் எம். எஸ். ஆரம்பித்தார். பிறகு கரகரப்ரியா ராகமும் "பக்கல நிலபடி" கீர்த்தனமும் பாடினார். இவ்வாறு கர்நாடக சங்கீதத்தின் ஸ்வரூபத்தைச் சிறிது காட்டி விட்டு, மீரா கீதங்களைப் பாடத் தொடங்கினார். "ஹரி ஆவன்கி ஆவாஜ்" என்னும் முதல் கீதத்திலேயே ஜவாஹர்லால்ஜி பரவசமுற்று, பாட்டு முடிந்ததும் கரகோஷம் செய்தார். பிறகு ஒன்றன் பின் ஒன்றாக வந்த ஒவ்வொரு ஹிந்துஸ்தானி கீதத்தையும் சபையோர் பெரிதும் ரசித்துத் தங்கள் பாராட்டுதலைக் கரகோஷத்தின் மூலம் தெரிவித்தார்கள்.

ஹிந்தி மீராவில் வரும் "கனையாம ஆயாரி" என்னும் ஹிந்தி கீதத்துக்குக் குழந்தை ராதா அபிநயத்துடன் நடனம் ஆடிய போது, சபையோர் குதூகல மிகுத்தை அடைந்தார்கள். சிலர் "இன்னும் ஒன்று வேண்டும்" என்று கேட்டதின் பேரில் "தாயே யசோதா" என்ற தமிழ்ப் பாட்டுக்கும் ராதா அபிநயம் பிடித்தாள். கச்சேரி முடிவில் பண்டித ஜவாஹர்லால்ஜி ராதாவைத் தம் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு குழந்தையின் நடனத் திறமையைப் பாராட்டினார். ஸ்ரீமதி எம். எஸ். ஸின் கானத்தை மிகவும் சிலாகித்து வாழ்த்தினார்.

* * *

ஸ்ரீ சதாசிவம் தம்பதிகள் புது டில்லிக்கு வந்த காரணத்தைப் பற்றி நேயர்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

சென்ற சில வருஷகாலமாக ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் பெயரும் அவருடைய சங்கீதத்தின் சிறப்பும் வட இந்தியாவில் பிரபலமடைந்து வந்திருக்கின்றன. அவருடைய கச்சேரிகளைக் கேட்டு ஆனந்தித்த வட இந்திய நண்பர்கள் பலர் தமிழ் மீராப் படத்தைப் பார்த்தார்கள். அதைக் கட்டாயம் ஹிந்தி பாஷையிலும் கொண்டு வர வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

"தமிழ்ப் படத்துக்கு ஹிந்தி உருவம் கொடுத்தால் அது வட இந்தியாவில் வெற்றி பெற முடியுமா?" என்பது பற்றி ஸ்ரீ டி.

சதாசிவம் பெரிதும் யோசனை செய்து தயங்கினர். கடைசியில் பல வட இந்திய நண்பர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்துவிடுவது என்று நிர்மானித்தார். ஆறு மாத காலம் பெருமுயற்சி செய்து தமிழ் மீராப் படத்தின் பாடல்களையும் சம்பாஷணையையும் ஹிந்தி பாஷையாக்கும் பணியைப் பூர்த்தி செய்தார்.

ஹிந்தி மீரா படத்தில், குமாரி ராதாவும் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியும் ஹிந்தி பாஷையை நன்றாகப் பயின்று தங்களுடைய பகுதிக்கு உரிய பேச்சுக்களையும் பாட்டுக்களையும் தாங்களே பேசிப் பாடியிருக்கிறார்கள். வட இந்தியர்கள் வியக்கும்படியாக ஹிந்தி பாஷையைத் தெளிவாகவும் அழகாகவும் கையாண்டிருக்கிறார்கள்.


ஹிந்தி மீராவையும் ஸ்ரீமதி எம். எஸ். ஸையும் வட இந்தியாவுக்கு அறிமுகப் படுத்தி வைக்கும் கைங்கரியத்தைக் கவியரசி சரோஜினி செய்வதற்கு மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார். ஏற்கெனவே ஸ்ரீமதி எம். எஸ். வின் வீட்டுக்கு வந்து அவரது கானத்தைக் கேட்டு மனமகிழ்ந்து பாராட்டியவர் ஸ்ரீமதி சரோஜினி என்பதை நேயர்கள் அறிவார்கள். எனவே ஹிந்தி மீரா படத்தின் ஆரம்பத்தில் வெள்ளித் திரையிலேயே தோன்றி, மீரா படத்தைப் பற்றித் தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கக் கவியரசி இசைந்தார். அவரைப் படம் எடுப்பதற்கும் அவருடைய முகவுரையை ஒலிப்பதிவு செய்வதற்குந்தான் ஸ்ரீ சதாசிவம் தம்பதிகள் புது டில்லிக்கு வந்திருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு கவியரசி சரோஜினி லாலா ஸ்ரீ ராம் வீட்டில் எம். எஸ். கச்சேரியை நடத்த ஏற்பாடு செய்தார்.

• • •

ஸ்ரீ சதாசிவம் தம்பதிகள் புது டில்லிக்கு வந்த காரியமும் வெற்றிகரமாகப் பூர்த்தியாயிற்று. முதலில் ஹிந்தி மீரா படத்தை ஸ்ரீமதி சரோஜினி பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஸ்ரீமதி சரோஜினியுடன் ஸர். டி. விஜயராகவாச்சாரியார், ஸ்ரீ சந்தானம், லாலா ஸ்ரீராம், அவருடைய குடும்பத்தார், ஸ்ரீமதி ஜான் மத்தாய், ஸ்ரீமதி தேவதாஸ் காந்தி முதலிய சுமார் நூறு பேர் ஹிந்தி மீரா படத்தைப் பார்த்தார்கள். படம் முடிந்து கொட்டகையில் விளக்குப் போட்ட போது சபையின் பெரும்பாலோருடைய கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது.

ஸர். டி. விஜயராகவாச்சாரியார் ஸ்ரீமதி சரோஜினியைப் பார்த்து "இந்தியாவின் கோகிலம் என்னும் பட்டத்தை இனி நீங்கள் விட்டுக் கொடுத்துவிட வேண்டியதுதான்!" என்றார். ஸ்ரீமதி சரோஜினியோ தமது பிராயத்தைக்கூட மறந்து, மானைப்போல் துள்ளி வந்து, ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மியை அன்புடன் கட்டிக் கொண்டு ஆசி கூறினார். "படம் அபாரம்; கலையின் சிகரம் இவ்வளவு உயர்வாயிருக்கும் என்று நான்கூட எதிர்பார்க்கவில்லை" என்றார். இன்னும் "இந்தப் படத்தை எத்தனை தடவை பார்த்தாலும் சலிக்காது. நூறு தடவை வேணுமானாலும் நான் பார்க்கத் தயார்!" என்றார். மேலும் "பாட்டு ஒரு பக்கம் இருக்கட்டும்; உங்கள் சங்கீதத்தின் உயர்வுதான் தெரிந்த விஷயமாயிற்றே? இவ்வளவு நன்றாக எப்படி நடித்தீர்கள்! — இல்லை; நடிப்பு என்றே சொல்லக் கூடாது. "மீராவின் வாழ்க்கையை அப்படியே தத்ரூபமாய்ப் பார்ப்பது போல் அல்லவா இருக்கிறது?" என்று வியந்தார். குழந்தை ராதாவின் கன்னத்தில் தட்டி, "இப்





புது டில்லியில் லாலா ஸ்ரீராம் அவர்களின் மாளிகையில் ஸ்ரீமதி எம். எஸ். கச்சேரி நடந்த போது ஓர் இடை நேரக் காட்சி. (ஜவாஹர்லால்ஜி ராஜாஜியிடம் ஏதாவது முக்கிய அரசியல் பிரச்னை சம்பந்தமாக அபிப்பிராயம் கேட்கிறாரா, அல்லது "இப்போது பாடியது என்ன ராகம்?" என்று கேட்கிறாரா என்பது தெரியவில்லை.) ராஜாஜிக்குப் பக்கத்தில் இருப்பவர், சீன சர்க்காரின் பிரதிநிதியாக இந்தியாவுக்கு வந்திருக்கும் ஸ்தானிகர் லோகியாஜுன். எம். எஸ். பாட்டையும் ராதா நடனத்தையும் பெரிதும் ரஸித்துப் பாராட்டியவர்.

படியும் ஒரு குழந்தை உண்டா!" என்று பாராட்டினார்.

படம் பார்த்தவர்களில் மற்றவர்கள் எல்லாரும், கதையில் ஒவ்வொரு கட்டமாக எடுத்துச் சொல்லிச் சொல்லி வியந்தார்கள்.

மறுநாள் ஸ்ரீமதி சரோஜினியின் பூர்வாங்கப் பிரசங்கத்தை ஒலிப்பதிவு செய்து படமும் எடுக்கப்பட்டது. கவியரசி இதற்காக முன்னால் எழுதித் தயார்செய்து கொண்டுவந்து பேசவில்லை! அந்தச் சமயம் தம் மனதில் தோன்றியதையே பேசினார். அவருடைய ஆங்கிலப் பேச்சின் மொழி பெயர்ப்பு வருமாறு:—

"தென்னிந்தியாவின் சுப்புலக்ஷ்மியை வட இந்தியாவின் மக்களுக்கு அறிமுகப்படுத்த முன் வந்திருக்கிறேன். அவருடைய தமிழ் மீரா படத்தை வட இந்தியாவுக்காக ஹிந்தி பாஷையில் ஆக்கி, வட இந்தியாவுக்கு அவர் அளித்திருக்கிறார். வட இந்தியாவுக்கு மீராவிடம் விசேஷ உரிமை உண்டு என்றாலும், மீரா உலகத்துக்கெல்லாமே சொந்தந்தான். எம். எஸ். சுப்புலக்ஷ்மியைப் பற்றி வட இந்தியாவுக்கு மட்டுமின்றி உலகத்துக்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆகையினாலேதான் ஆங்கிலத்தில் பேசுகிறேன்.

இந்தியாவில் சின்னஞ் சிறு குழந்தை கூடச் சுப்புலக்ஷ்மியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கும். அவருடைய குரல் இனிமையைப் பற்றியும், அவருடைய தர்ம கைங்கரியங்களின் சிறப்பைப் பற்றியும் அனைவரும் அறிந்திருப்பார்கள். ஆயினும் வட இந்திய மக்கள் அவரை இன்னமும் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்தியாவின் தலைசிறந்த கலைவாணிகளில் ஒருவர் சுப்புலக்ஷ்மி என்பதை உணர்ந்து, அன்புடன் போற்றிக் கௌரவிக்க வேண்டும். மீராவின்



கதை இந்தியாவின் கதையாகும்; இந்தியாவின் பக்தி மகிமை, ஆத்ம சமர்ப்பணத்தின் பெருமை இவற்றின் கதையாகும். மன்னர் குலத்திலுதித்த கவியரசி மீராவுக்கு உலக சரித்திரத்தில் உவமை சொல்லக் கூடியவர் வேறு யாரும் இல்லை. தெரிஸா, ஸிஸிலியா முதலிய கிருஸ்தவ பக்த சிரோமணிகள் ஏசு கிருஸ்துவின் பூரண அருளைப் பெற்றவர்கள். ஆனால் மீராவோ தான் பிரேமை கொண்ட கண்ணனோடு இரண்டறக் கலந்து ஐக்கியமாகி விட்டவள். சுப்புலக்ஷ்மி இந்தப் படத்தில் மீராவாக நடித்திருக்கிறார் என்பது அவ்வளவு பொருத்தமில்லை. மீரா கீதங்களை அவர் பாடும்போது, மீராவே புத்துயிர் பெற்று வந்து நம் முன்னால் பாடுகிறார் என்றே நம்பத் தோன்றுகிறது. சுப்புலக்ஷ்மியின் அற்புதமான கானத்தைக் கேட்பவர்கள் யாரானாலும், இந்தத் தலைசிறந்த கலைவாணியின் உணர்ச்சி ஊட்டும் முக பாவங்களைப் பார்ப்பவர் யாரானாலும், அவர்கள் தங்கள் உள்ளத்தைப் பறி கொடுத்து மெய் மறந்து விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. சுப்புலக்ஷ்மி மீராவாக நடிக்கிறார் என்ற எண்ணமே யாருக்கும் தோன்றாது. அவரே மீரா என்றுதான் எண்ணத் தோன்றும்.

இந்தக் காலத்து பாரத சந்ததியிலே இத்தகைய இணையில்லாத கலைவாணி தோன்றியிருப்பது பற்றி நீங்கள் ஒவ்வொருவரும் பெருமை கொள்வீர்கள் என்பதில் சந்தேகமில்லை.''

கவியரசி ஸரோஜினி இப்படிப்பட்ட இணையில்லாத பாராட்டு மொழிகளை ஆங்கில பாஷையில் கவிதா ரஸத்துடன் அள்ளிக் கொட்டியிருக்கிறார். ஹிந்தி மீரா படத்தைப் பார்ப்பவர்கள் கவியரசியையும் திரையில் பார்க்கலாம்; அவருடைய இனிய சொற் பிரவாகத்தைக் கேட்கலாம்.

இத்தனை நாளும் சங்கீதம் முதலிய கலைத் துறைகளில் வட இந்தியாவில் பிரபலமடைந்த தென்னிந்தியர்கள் அதிகம் பேரில்லை. இப்போது ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி தென்னிந்தியாவின் கலைச் சிறப்பை வட இந்தியாவில் நிலை நாட்டிக் கொண்டு வருகிறார். ஹிந்தி "மீரா"வின் மூலமாகத் தென்னிந்தியாவின் கலைச் சிறப்பு வட இந்தியாவில் என்றுமில்லாத புகழை அடையும் என்று எதிர்பார்க்கலாம்.

படித்துப் பார்

ஆத்ம சிந்தனை

டாக்டர் அளகப்பச் செட்டியார்

உலகத்திலே கடவுள் படைத்துள்ள அற்புதங்கள் கணக்கில் அமையா; எட்டில் அடங்கா. ஆயினும் அவற்றைக் கண்டு களிப்போர் எத்தனை பேர்? அவை உண்டென்றே அறிந்தோர் எத்தனை பேர்? இயற்கை அதிசயங்களை அறியாதவர்களைக் காட்டிலும் இலக்கியச் செல்வங்களை அறியாத மக்கள் எவ்வளவோ கோடிக் கணக்கானவர்கள்.

வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலையும் நிலைமை வருந்தத்தக்க தன்றோ? கண்ணிருந்தும் பாரார்; செவி இருந்தும் கேளார். இவர்களுக்கு நாம் என்ன உதவி செய்ய முடியும்? அவர்களை நோக்கி, "மீண்டும் பாரும், கேளும்; உம்மிடம் சக்தி உண்டு' என்று சொல்லுவதே நாம் செய்யக் கூடிய உதவி.

ஒரு சமயம் என் ஆப்த நண்பரும் சென்னை ஷெரிப்புமான ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு "ஆத்ம சிந்தனை" என்னும் ஒரு தமிழ் நூலை என்பால் அளித்தார். மிக்க நன்றியறிதலோடு வாங்கி அதை முற்றிலும் படித்துப் பார்த்தேன்.

ரோம் ராஜ்யத்தை கி. பி. 160 முதல் 180-ம் ஆண்டு வரை ஆண்டு வந்த மார்க்க அரேலிய சக்கரவர்த்தி எழுதிய ஆத்ம சிந்தனைக் குறிப்புக்களை ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்ததாகும் இந்நூல். ஒரு சக்கரவர்த்தி எழுதிய நூலை வேறொரு சக்கரவர்த்தி மொழி பெயர்த்தது மிக வும் பொருத்த முடையதே.

இந்த நூலைப் படித்துப் பார்க்கும்போது இதனை மொழிபெயர்ப்பென்று சொல்வதற் கில்லை. ஒரு மூலத் தமிழ் நூல் என்று சொல்லக்கூடிய சிறப்பு வாய்ந்துள்ளது.

இது தமிழ் நாட்டினருக்கு ராஜாஜி அவர்கள் அளித்த ஒரு சிறந்த இரத்தின மாகும். இந்த இரத்தினத்தை உள்ளே புதைத்து வைக்காமல் நாம் அதை நன்கு உபயோகித்துப் பிரகாசமடைய வேண்டும். புத்தகத்தை நன்றாகப் படித்து நம் மனத் தையும் வாழ்க்கையையும் பரிசுத்தமாக் கிக் கொள்ளவேண்டும்.

இந்த நூலைப் பற்றி ராஜாஜி முகவுரை யில் பின்வருமாறு எழுதுகிறார்:—

"மார்க்க அரேலியர் தமக்கென்று எழுதிய இந்தக் குறிப்புகள் மிகச் சிறந்த ஓர் அற நூலாகும் என்பது என் அபிப் பிராயம். அரசனும் யோகியுமான இந்த மகானுடைய உள்ளத்திலிருந்து பொங்கிய எண்ணங்களை அவர் அவ்வப்போது எழுதி வைத்தார். அது நம்முடைய வேதாந்தத் திற்கு ஓர் உரைபோல் விளங்குகிறது. நம்மைப்போல் சுக துக்கங்களில் சிக்கிய மனிதர் கூறும் வார்த்தைக்கு ஒரு தனி சக்தி உண்டு. என் வாழ்க்கையிலே நான் இந்த நூலிலிருந்து மிகுந்த ஆறுதல் அடைந்திருக்கிறேன். மற்றவர்களும் இந்தப் பயனை அடைய வேண்டு மென்பது என் ஆசை."

இந்த நூலை மீண்டும் மீண்டும் நான் படித் தேன். ஆனந்தமும் ஆறுதலும் அடைந் தேன். இப்போது "கல்கி"யில் இந்த நூலை விமர்சனம் செய்யும்படியான சந்தர்ப்பம் கிடைத்ததை ஒரு பெரும் பேறாகக் கருதுகிறேன். ராஜாஜியின் மொழி பெயர்ப்பை நான் விமர்சனம் செய்ய முன் வந்ததற்குக் காரணம், ஆத்ம சிந்தனையைப் படித்து அனைவரும் பயனடைய வேண்டு மென்னும் ஆத்திரமே யாகும்.

மனிதன் வாழ்க்கையை நலமுற நடத் திக் கடைத்தேற வேண்டுமென்று எழுதிய நூல்கள் பல எல்லா மொழிகளிலும் உண்டு. கீதை, உபநிஷத்து இவை போன்ற பல நூல்கள் வேதமென்றும் கடவுள் வாக்கென் றும் சொல்லப்படுகின்றன. இவற்றைப் படிக்

ஆசிரியர்: ராஜாஜி: பிரசுரம்: புதுமைப் பதிப்பக —சக்குடி. விலை ரூ. 1—8—0

கையில் வியப்பும் பயமும் உண்டாகின்றன. "கடவுள் சொல்லுவது போல் மனிதன் உலகில் எப்படி நடக்க முடியும்? நம் கஷ்டம் அவருக்குத் தெரியாது. தெரிந்தால் இவ்வித நிபந்தனைகளை ஏற்படுத்த மாட்டார். அவர் சொல்லுகிறபடி நடத்திக் காட்டட்டும்; பார்ப்போம்" என்று சொல்வோம்.



இந்த "ஆத்ம சிந்தனை" நூலைப் படிக்கும்போது நமக்கு அத்தகைய எண்ணம் உண்டாகாது. ஏனெனில் இக் குறிப்புகளைப் பிறர் படிக்கவேண்டி மார்க்கர் எழுதவில்லை. உலகத்தில் பிறருக்கு ஒரு சட்டம், நமக்கொரு சட்டம் வைத்துக்கொள்ளும் அனுபவம் நாம் நன்கு அறிந்ததே. தமக்காகவே, தம் மனோ நிலையைத் திடப்படுத்திக் கொள்ளவே, அவ்வப்போது மார்க்கர் எழுதிய குறிப்புக்கள் இவை. பிறருக்குச் செய்யும் பகட்டான உபதேசமல்ல.

எந்தக் கடமையையும் செய்ய முக்கியமாக இருக்க வேண்டியது ஞானம். இந்த ஞானம் எதுவென்றால் ஒவ்வொருவர் உள்ளத்திலும் குடிகொண்டிருக்கும் தெய்வத் தன்மையை யுடைய ஆத்மாவுக்குத் தீங்கு நேரிடாமல் சுத்தமாக வைத்துப் பாதுகாப்பதே. சுகம் துக்கம் இரண்டும் ஆத்மாவைப் பாதிக்காத வண்ணம் மனத்தை நிலை நிறுத்துவதே ஞானம்.

ஒவ்வொருவனும் தான் பரம்பொருளின் அம்சமென்றும், கடவுள் எல்லா ஜீவராசிகளிலும் மறைந்திருக்கிறார் என்றும் நினைக்க வேண்டும்.

இந்த நிலையை ஒருவன் அறிந்தவுடன், தான் வேறு உலகம் வேறு என்ற எண்ணம் அவனை விட்டு அகன்றுவிடும். அப்போது பிறர் சந்தோஷத்தைத் தன் சந்தோஷமாகவும், பிறர் துக்கத்தைத் தன் துக்கமாகவும் கருதுவான். அக்கருத்து ஏற்பட்டவுடன் ஆத்ம சுத்தியை அடைவான்.

சந்தோஷமும் துக்கமும் ஒரு பொருளின் இருபுறங்களாகும். முன்புறமாயிருந்தாலென்ன, பின்புறமாயிருந்தாலென்ன? நமது நோக்கம் இவை யிரண்டையும் கடந்து மனத்தை உட்புறமாகச் செலுத்தி, உள்ளே மறைந்து கிடக்கும் ஆன்மாவைக் கண்டுகொண்டு, அதற்கு உண்மையான தொண்டு செய்வதில் சிந்தனையைச் செலுத்துவதே. அவ்வழியைக் கடைப் பிடித்தால் விதியால் வந்த சுகமும் விலக்க முடியாத துக்கமும் இறைவன் அருளால் இயைந்த வரப் பிரசாதம் என்று வணக்கத்துடன் ஏற்றுக் கொள்ளக் கூடிய மனநிலை ஏற்படும். அந்த நிலையே சாந்தி தரும். அதுவே நாம் அடைய வேண்டிய பாக்கியம். சாந்திக்கு ஒப்பு உயர்வுள்ள நிலையே இல்லை. அதுவே புத்தர் போற்றிய நிர்வாணம். ஈசனை அடையும் மார்க்கம். ரிஷிகள் விரும்பும் சித்தியும் பரம்பொருள் அளிக்கும் பெரும் பொருளும் அதுவே.

ஆத்ம சுத்தியை அடைய வேண்டுமாயின் தீமையை நினையாமலும் செய்யாமலும் இருப்பதே. அன்பிலே பிறந்த நாம் அன்பிலே வளரவேண்டும். தீய எண்ணங்களை அறவே ஒழிக்கவேண்டும். இராமலிங்க சுவாமிகள் சொல்லியது போல உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமல் இருத்தல் வேண்டும். மார்க்கர், "திடீரென்று ஒருவன், 'நீ என்ன நினைக்கிறாய்?' என்று கேட்டால், உடனே தயங்காமல் உள்ளதை உள்ளபடியே, 'இது நினைத்தேன். இது என் மனத்தில் உள்ள எண்ணம்' என்று சொல்லவேண்டும்" என்கிறார்.

மனநிலையே ஆச்சிரமத்தை அரண்மனையாகவும் அரண்மனையை ஆச்சிரமமாகவும் மாற்றிக் கொள்ளும் சக்தி வாய்ந்தது. ஆகையால் பயனற்ற விருப்பங்களில் மனம் செலுத்தாமல் கைகண்ட மருந்தை மனத்தினால் அடையலாம். சத்தியத்தையே பின்பற்றவேண்டும். மனநிலையை ஒழுங்கு படுத்தினால் எது நேர்ந்தாலும், "எல்லாம் ஈசன் செயல்" என்ற கருத்து உண்டாகும். ஒன்றை நாம் சுகமாகவோ துக்கமாகவோ நினைக்கவே இடமிராது.

புகழுக்காக அலைந்து திரியும் மானிடர்களுக்கு மார்க்கர் பசுமரத்திற் பாயும் ஆணி போல் சில குறிப்புக்களைக் கூறுகிறார். "உலகத்தில் உடனே மறக்க வேண்டியது ஒன்றுண்டு. அதுதான் மற்றொருவனுக்குச் செய்த உதவி. எப்போதும் நினைக்க வேண்டியது பிறர் செய்த நன்றி" என்று சொல்லுகிறார்.

இவை போன்ற பல அருமையான விஷயங்கள் இந்தச் சிறந்த நூலை அலங்கரிக்கின்றன. இந்த மொழி பெயர்ப்பைத் தமிழ் உலகத்துக் களித்த ராஜாஜியவர்களுக்கு நாம் நன்றி பாராட்ட வேண்டும்.

கண்டறியாதன கண்டேன்!

சின்ன அண்ணாமலை



ஸ்ரீ வைகுண்டம்

தூத்துக்குடியி லிருந்து நாங்கள் புறப்பட்டபோது, "இந்த வயதிலேயே வைகுண்டத்துக்குப் போவதா?" என்று கொஞ்சம் தயக்கமா யிருந்தது.

வைகுண்டத்துக்குப் போகும் பாதை அவ்வளவு காடு முரடாயும் மேடு பள்ளமாயும் இருக்குமென்று எனக்கு அதற்கு முன்னால் தெரியாது! முன்பின் போயிருந்தால் அல்லவா தெரியும்? வழியிலேயே பல தடவை வைகுண்டத்தை எட்டி, மறுபடியும் பூமிக்கு வந்து,—இப்படியாகப் பெரும் அவஸ்தைக்கு உள்ளானேனும். கடைசியாக வைகுண்டத்தை நாங்கள் அடைந்தபோது, அது நிஜமான வைகுண்டமல்ல வென்றும், ஆனால் வைகுண்டத்தைப் போலவே மகிமை வாய்ந்த ஸ்தலம் என்றும் தெரிந்து கொண்டேன்.

ஸ்ரீ வைகுண்டத்தில் காங்கிரஸ் பிரமுகர்களான ஸ்ரீ செந்திப் பெருமாள் தேவர், ஸ்ரீ சின்னத்தம்பித் தேவர், ஸ்ரீ ஆதித்தன் எம்.எல்.ஏ. முதலிய ஸ்தல காங்கிரஸ் பிரமுகர்கள் சபாநாயகரை வரவேற்றுக் கோவில் மரியாதைகளுடன் ஆலயத்துக்குள் அழைத்துச் சென்றார்கள். கள்ளர் பிரானும், நின்ற நாராயணப் பெருமாளுமான ஸ்ரீ வைகுண்டநாதர் நமது சபாநாயகருக்குத் திவ்ய தரிசனம் கொடுத்துத் தம் பிரதிநிதிகளான அர்ச்சகர்கள் மூலம், "மார்க்கண்டனைப் போல என்றும் பதினாறாக வாழ்வீராக!" என்று ஆசிர்வாதமும் செய்தார். அதாவது ஒரு அர்ச்சகர் ஆசிர்வாதம் செய்ய, மற்றவர்கள் "ததாஸ்து" என்று சொன்னார்கள்.

ஊரின் பேரை உத்தேசிக்கும் போது மேற்படி ஆசிர்வாதம் அவசியமாகவே காணப்பட்டது. ஸ்ரீ வைகுண்டத்தில் எழுந்தருளி யிருக்கும் 'நின்ற பெருமாள்' ஹரிஜனங்களுக்குத் தரிசனம் கொடுத்தவுடன், பக்கத்து ஸ்தலங்களில் உள்ள 'இருந்த பெருமான்' 'கிடந்த பெருமான்' எல்லோரும் ஹரிஜனங்களுக்குத் தாராளமாய்த் தரிசனம் கொடுத்து விட்டார்களாம். ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து ஆழ்வார் திருநகரிக்குப் பிரயாணமானோம்.

ஆழ்வார் திருநகரி

திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரி தமிழுக்கு மிகவும் சொந்தமான இடம். சடகோபர் என்னும் நம்மாழ்வார் இங்குள்ள புளியமரத்தடியில் வீற்றிருந்து தான் 'தமிழ் மறை' என்று போற்றப்படும் ஆயிரக் கணக்கான பாசுரங்களை 'அமுதொழுகுகின்ற தமிழினில்' விளம்பினார். இக்கோவிலை ஹரிஜனங்களுக்குத் திறந்து விடுவதில் கொஞ்சம் சிரமம் ஏற்பட்டு விட்டதாம். ஒரு சிலருடைய அவசரம், 'அதிகப்' பிரசங்கம் ஆகியவற்றினால், ஆலயப் பிரவேசத்துக்குக் குறிப்பிட்ட தேதியில் அர்ச்சகர்கள் கோவிலை இழுத்துப் பூட்டிக் கொண்டு போய்விட்டார்களாம்! பெருமான் மூன்று நாட்கள் பூஜையும், பிரசாதமும் இல்லாமல் பட்டினி கிடந்தாராம்! பின்னர் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி ஊழியர்கள் முன்வந்து பெருமானுடைய பட்டினியைப் போக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்துப் போலீஸாரின் சாத்விக உதவியுடன் கோவிலைத் திறந்த பிறகுதான் பெருமான் உபவாசத்தை முடித்தாராம். ஆயினும் உள்ளூர் அர்ச்சகர்கள் இன்னமும் 'ஸ்ட்ரைக்'கை வாபஸ் செய்யாததினால் வேறு ஊர்களிலிருந்து அர்ச்சகர்கள் வந்து பூஜை நடத்தி வருகிறார்கள்.

ஆழ்வார் திருநகரியில் பல ஆச்சரியமான விஷயங்களைக் கேட்டோம்; பார்த்தோம். ஆயிரம் வருஷத்துக்கு முன்னால் நம்மாழ்வாருக்கு நிழல் அளித்த புளியமரம் நாலு பிரம்மாண்டமான கிளைகளாகப் பிரிந்து இன்றும் நின்று வருகிறது. அதற்கு 'உறங்

காப் புளி' என்று பெயராம். மற்ற புளிய மரங்களைப் போல் இந்தப் புளியமரம் இரவில் இலை குவிந்திருப்பதில்லையாம். அதில் காய்க்கும் காய்கள் பழமாகப் பழுப்பதும் கிடையாதாம். இப்பேர்ப்பட்ட அருமையான ஸ்தலத்தைப் பற்றி எங்களுக்கு எடுத்துச் சொல்லவும், திருநகரியைப் பற்றிய தமிழ்ப் பாடல்களைப் பாடிக் காட்டவும் ரஸிகமணி டி. கே. சி. வந்தாரில்லையே என்று நாங்கள் கவலைப் பட்ட சமயத்தில், ஆசிரியர் சீனிவாச ராகவன் அங்கு வந்து சேர்ந்தார். அவரால் ஓரளவு எங்கள் மனக்குறை தீர்ந்தது. ஆழ்வார் திருநகரி கோவிலைத் திறப்பதற்கு மிக்க ஊக்கத்துடன் பாடு பட்டவர்களில் ஒருவர் ஆசிரியர் சீனிவாச ராகவன் என்று நண்பர் விட்டலாபுரம் வேங்கடாச்சாரியார் எங்களுக்கு ஏற்கனவே தெரியப்படுத்தியிருந்தார்.

ஸ்ரீ சீனிவாச ராகவன் தலைமையில் கோவிலுக்குள்ளே ஒரு சிறு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தமிழன்பு கொண்ட இந்த ஆங்கில ஆசிரியர் நம்மாழ்வார் பாடல்கள் சிலவற்றைச் செவி குளிர எடுத்துச் சொல்லிச் சபாநாயகரையும் கல்கியையும் வரவேற்றார். வரவேற்புக்கு வந்தனம் சொல்லச் சபாநாயகர் எழுந்த சமயத்தில் ஒரு மாடு கோவிலின் உட் பிராகாரத்தில் ஆனந்தமாக நடமாடிய காட்சி புலப்பட்டது. அத்துடன் ஒரு ஆடு கூட்டத்துக்கே வந்துவிட்டது! உடனே சபாநாயகர், "இதோ ஒரு மாடு கோவிலுக்குள் செல்லுகிறது. இதை யாரும் தடுத்து நிறுத்துவதில்லை. மனம் ஒப்பி அதைக் கோவிலுக்குள் செல்ல அனுமதிக்கிறோம். ஆனால் மனிதர்களில் ஒரு சாராரைக் கோவிலுக்குள் செல்ல அனுமதிக்காமலிருப்பது எவ்வளவு அநியாயம்?" என்று பிரத்யட்ச உதாரணங்களுடன் விஷயத்தை விளக்கமாக எடுத்துக் கூறி விட்டு, அது பெருமாள் கோவில் என்பதைக் கூடக் கவனியாமல், "முருகன் உங்கள் எல்லோருக்கும் அருள் புரிவாராக!" என்று பிரசங்கத்தைச் சுருக்கமாகவே முடித்து அருள் புரிந்தார். இதிலிருந்து சபாநாயகரின் உடம்பு திருக்குருகூரில் இருந்தாலும் அவருடைய உள்ளம் ஏற்கனவே திருச்செந்தூருக்குப் போய் விட்டது என்பதை நண்பர்கள் அறிந்து கொண்டு, மேலே புறப்பட விரைந்தார்கள்.

நாங்கள் தரிசித்த எத்தனையோ க்ஷேத்திரங்களில் ஆழ்வார் திருநகரியில் மட்டும் வழக்கமான அர்ச்சகர்கள் இல்லையென்பது சிறிது வருத்தத்தை அளித்தது. ஸ்ரீ சிவசண்முகம் அவர்களைப் போன்ற பக்த சிரோமணியை வரவேற்பதற்கு அந்த அர்ச்சகர்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை! பெருமாள் கோவில் பிரசாத மகிமையைப் பற்றி ரொம்பவும் கேள்விப்பட்டிருந்த எங்களில் சிலருக்குப் பிரசாதம் பெறக் கொடுத்து வைக்கவில்லை!

க்ஷேத்திரத்தில் பழைய அர்ச்சகர்கள் மனமாற்றம் அடைந்து பெருமாள் பணி செய்யத் திரும்பி வரவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு பெட்ரோல் ஆழ்வார் சன்னிதிக்குச் சென்று மோட்டார் மெஷின் பெருமானுக்குப் பூஜை செய்து விட்டு மேலே பிரயாணமானோம்.

திருச்செந்தூர்

ஆழ்வார் திருநகரிக்கும் திருச்செந்தூருக்கும் மத்தியிலிருக்கும் பாதையிலே உள்ள பள்ளத் தாக்குகள் எங்களைத் தாக்கு தாக்கென்று தாக்கி விட்டன! பல ஊர்வாசிகளின் வரவேற்புக்களும் தாக்கின. இவ்வளவு தாக்குதலுடன் திருச்செந்தூருக்குப் பகல் ஒரு மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். எனக்குப் பசி கண்ணைச் சுற்றியது. ஆனால் சபாநாயகரோ முருகனைத் தரிசனம் செய்து விட்டுத்தான் சாப்பிட வேணும் என்று அடம் பிடித்தார். இந்தச் சந்தர்ப்பத்திலேதான் திருச்செந்தூர் முருகனுக்கு என்னிடம் உள்ள அந்தரங்க அபிமானம் தெரிய வந்தது! முருகன் நமது சபாநாயகருக்காக இத்தனை நேரம் காத்திருந்து விட்டு இப்போதுதான் ஓய்வு எடுத்துக் கொண்டதாகவும், ஆகையால் சபாநாயகர் கோஷ்டியைச் சரியாக மூன்று மணிக்கு வரச் சொல்லியும் ஆலயத்திலிருந்து தகவல் வந்தது. அதன் பேரில் வேறுவழி இல்லாமல் வேண்டா விருப்புடன் ஸ்ரீ சிவசண்முகம் உணவு அருந்தச் சம்மதித்தார். திருச்செந்தூரின் 'தாஜ்மகால் ஹோட்டல்' என்று பெயர் பெற்ற மனோரஞ்சிதவிலாஸ் ஹோட்டலை நடத்தும் ஸ்ரீ சீனிவாசய்யர் சபாநாயகர் கோஷ்டிக்காகத் தயாராய் வைத்திருந்த அபார விருந்து முருகன் அருளால் தப்பிப் பிழைத்தது!

மூன்று மணிக்கு ஆலயத்துக்குப் புறப்பட்டோம். வழி நெடுக அழகான பந்தல் போட்டுத் திருச்செந்தூர் வாசிகள் வெயிலே தெரியாமல் செய்து வைத்திருந்தார்கள். கோவிலுக்குச் செல்லும் பாதை பெரிய

சக்கரவர்த்தியின் தர்பார் மண்டபத்திற்குப் போகும் வழிபோல் கம்பீரமாக அமைக்கப் பட்டிருந்தது. கோவில் வாசலில் மேள தாளங்களுடன் வரவேற்பு. அங்கே எல்லோரும் சட்டைகளைக் கழற்றி வைத்து விட்டுப் பயபக்தியுடன் செந்தூர் வேலாண்டியைத் தரிசனம் செய்யப் புறப்பட்டோம். ஆகா! கோவில் என்றால் இதுதான் கோவில்! அற்புதமான கோவில். அலை கடலின் ஆரவாரம் ஆலயத்தில் மோத, அன்பர்களின் பக்தி வெள்ளம் கடலிலே கலக்க, அமுதங் கலந்த கடற் காற்று உடம்பில் பட்டுக் கொஞ்ச, கண்களும் கண்களின் வழியாக உள்ளமும், முருகன் திரு உருவத்தில் ஈடுபட்டு லயித்திருக்க, பக்த கோடிகள் மெய்ம்மறந்து நிற்கும் காட்சியை வேறு எங்கு காண முடியும்?

திருச்செந்தூர் ஆலயத்தில் சிற்ப நூலின் அற்புதத்தைக் கண்டேன்; விண் மறைக்கும் கோபுரத்தைக் கண்டேன்; விண் மறைக்கும் திரு மதில்களைக் கண்டேன்; கலையமைந்த காவணத்தைக் கண்டேன்; கன்னித் தமிழ் அளித்த கந்தனையும் கோயிலுக்குள்ளே கண்டேன். இன்னும் கண்டறியாதன வெல்லாம் கண்டேன்!

சபாநாயகர் கோவிலுக்குள்ளே சென்றார். "முருகா முருகா" வென்று கதறிக் கண்ணீர் உகுத்துக் கொண்டே வலம் வந்தார். முருகனுடைய சந்நிதானத்தை அடைந்ததும் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்.

முதலில் சங்கரன் கோவிலுக்குப் போன போது அந்தக் கோவிலில் இருந்த 1,126 தூண்களோடு 1,127 தூணாகக் கல்கியும் 1,128-வது தூணாக ராஜுவும் நின்றுகொண்டிருந்தோம். (நேயர்கள் இதற்கென்று சங்கரன் கோயில் சென்று தூண்களை எண்ணிப் பார்க்க மாட்டார்கள் என்ற தைரியத்தினால் மேற்படி புள்ளி விவரம் கொடுத்திருக்கிறேன்.) ஆனால் ஒவ்வொரு கோவிலாகச் சபாநாயகருடன் தரிசித்து வந்த போது, கல்கியின் தலை கொஞ்சம் கொஞ்சமாக வணங்கிக் கொண்டு வந்தது. தமிழ் வேதம் அருளிய நம்மாழ்வார் சந்நிதியைக் கண்டதும் தமிழ்ப் பற்றுடைய கல்கியின் இடுப்பு வளைந்து விட்டது. திருச்செந்தூரில் தமிழ்க் கடவுளாகிய முருகனைக் கண்டவுடன் கல்கியின் உடல் அவரை அறியாமலே தரையில் விழுந்து தமிழ்த் தெய்வத்தை வணங்கியது. திருச்செந்தூரில் கோயில் கொண்டிருக்கும் தமிழ்த் தெய்வத்தின் அழகிய தோற்றத்திற்கு ஈடுமில்லை, இணையுமில்லை! அந்தத் தெய்வத்தின் சந்நிதியில் மனமுருகிப் பரவசமடையாத தமிழன் எவனும் இருக்க முடியாது. தெய்வம் எதிரே நின்று நம்முடன் உரையாடுவது போலவே தோன்றுகிறது.



திருச்செந்தூர் கோவில் யானை ஆலயப் பிரவேசத்தை முழு மனதுடன் ஆதரித்துச் சபாநாயகரை வரவேற்கிறது.

பாஞ்சாலங்குறிச்சியை ஆண்ட கட்டப் பொம்மு, ஊமைத் துரை முதலியவர்கள் திருச்செந்தூர் முருகனிடம் மிக்க பக்தி செலுத்தி வந்தார்களாம். தினம் முருகனுக்குப் பூஜையான பிறகே தாங்கள் சாப்பிடுவது என்ற வழக்கம் வைத்திருந்தார்களாம். பாஞ்சாலங்குறிச்சி திருச்செந்தூரிலிருந்து சுமார் 40 மைல் இருக்கும். மேற்படி பாதையில் நாலு மைலுக்கு ஒன்று வீதம் மணி மண்டபங்கள் கட்டியிருந்தார்கள். கோவிலில் பூஜை மணி கேட்டவுடன் முதல் மணிமண்டபத்தில் மணி அடிக்கப்படும். அதைக் கேட்டதும் இரண்டாவது மணி மண்டபத்தில் மணி அடிப்பார்கள். இப்படி வரிசைக் கிரமமாக அடித்துக் கொண்டே வந்து கடைசியாகப் பாஞ்சாலங்குறிச்சியில் மணி அடிப்பார்களாம். இந்த மணி ஓசையைக் கேட்டுவிட்டுத்தான் கட்டப் பொம்மு சாப்பிடுவாராம்.

திருச்செந்தூர், திருவனந்தபுரம் ராஜாக்களின் ஆதிக்கத்தில் கொஞ்ச காலம் இருந்



திருச்செந்தூர் முருகனைத் தரிசித்து விட்டுச் சபாநாயகர் வலம் வருகிறார்.

நதாம். அதனால் இன்றும் மலையாளத்துப் போத்திமார்தான் முருகனுக்குப் பூஜை செய்கிறார்கள். கோவிலுக்கு ஆறு லட்சம் ரூபாய் சொத்து உண்டு என்றும் வருஷவருமானம் இரண்டரை லட்சம் இருக்குமென்றும் சொன்னார்கள். தூத்துக்குடியில் பல வியாபாரிகள் தங்களுக்குக் கிடைக்கும் லாபத்தில் 100-க்கு இவ்வளவு பங்கு என்று திருச்செந்தூர் முருகனுக்குக் காணிக்கை செலுத்தி வருகிறார்களாம்.

முருகனைத் தரிசனம் செய்து விட்டு வெளியே வந்ததும், சந்நிதிக்கு எதிரிலுள்ள கடற்கரை மண்டபத்தில் ஜனங்கள் நின்று தலைவர்களை வரவேற்றார்கள். ஸ்ரீ சோமயாஜுலுவின் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. சபாநாயகர் ஜாதி ஹிந்துக்களுக்கு மனமாற்றம் உண்டாகி ஹரிஜனங்களை இந்தப் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயத்துக்குள் விட்டது பற்றித் தம் பெரு மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

கல்கி ஒரே உணர்ச்சிப் பிரவாகத்தில் மூழ்கி இருந்தாலும், ஹாஸ்யமாகவே பேசினார். ஒருவன் வெள்ளிக்கிழமை நன்றாகச் சாப்பிட்டுவிட்டுத் தூங்கிப்போனானாம். சனிக்கிழமையும் தூங்கிவிட்டு ஞாயிற்றுக் கிழமை தான் எழுந்தானாம். எழுந்தவன் "இன்றைக்கு என்ன கிழமை?" என்று கேட்டானாம். இன்று ஞாயிற்றுக்கிழமை என்று பக்கத்திலிருந்தவர்கள் சொன்னார்களாம். உடனே அவன் "அப்படியானால் சனிக்கிழமை எங்கே போச்சு?" என்று கேட்டானாம். அதைப்போல நான்கு வருஷத்துக்கு முன் திருநெல்வேலி ஜில்லாவை விட்டுப் போனவர்கள் இன்று மறுபடியும் திரும்பி வந்தால் "தீண்டாமை என்பதாக ஒரு முட்டாள்தனம் இருந்ததே, அது எங்கே போச்சு?" என்பதாகக் கேட்கவேண்டியிருக்கும் என்று கல்கி கூறினார். "அப்படி அந்த தீண்டாமைப் பேயை, நமது சோமயாஜுலு, மேகநாதன், மீனாட்சிசுந்தரம் முதலிய திருநெல்வேலி காங்கிரஸ் தொண்டர்கள் சேர்ந்துகொண்டு, திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு ஊராக விரட்டி அடித்துக்கொண்டு வந்து, கடைசியில் இந்தத் திருச்செந்தூர் சமுத்திரத்திலே மூக்கி மூழ்க அடித்துவிட்டார்கள்! அவர்களுக்கு ஹிந்து சமூகம் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறது!" என்று கல்கி ஆசிரியர் சொன்னதைச் சபையோர் அங்கீகரித்துக் கரகோஷம் செய்தார்கள்.

ஸ்ரீ மேகநாதன் வந்தனோபசாரம் கூறுகையில், பழைய சம்பவம் ஒன்றை ஞாபகப்படுத்தினார். முன்னொரு சமயம் ராஜாஜி திருச்செந்தூருக்கு வந்திருந்த போது ஆலயத்துக்கு வரும்படி அழைக்கப்பட்டாராம். "ஹரிஜனங்களை விடாத கோவிலுக்கு நான் வருவதற்கில்லை" என்று ராஜாஜி சொல்லிவிட்டாராம். "இப்போது திருச்செந்தூர்க் கோவிலைத் திறந்துவிட்ட செய்தி ராஜாஜிக்கு அளவில்லாத மகிழ்ச்சியளித்திருக்கும். அவர் இன்று இங்கு வர முடியாவிட்டாலும் அவருடைய அந்தரங்க அன்புக்குரிய சீடர்கள் வந்திருக்கிறார்கள். ஆகையால், என்னைப் பொறுத்தவரை, இன்றுதான் உண்மையாகத் திருச்செந்தூர் ஆலயப் பிரவேசம் நடந்தது" என்று ஸ்ரீ மேகநாதன் உணர்ச்சி ததும்பக் கூறினார்.

மணப்பாடு

திருச்செந்தூரிலிருந்து மணப்பாடு கிராமத்துக்குப் பிரயாணமானோம். மணப்பாடு, குலசேகரப் பட்டினத்துக்கு அப்பால் கடற்கரை ஓரத்திலுள்ள அழகிய கிராமம். 1942 ஆகஸ்டு இயக்கத்தில் குலசேகரப்பட்டினம் எவ்வளவு முக்கியமான ஸ்தானத்தைப் பெற்றது என்பதை நேயர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. அந்தப் பிர

தேசத்தில் ஸ்ரீ மேகநாதன் பதினைந்து நாள் வரையில் தலைமறைவாய் ஒளிந்திருந்த காட்டைக் காட்டும்படி "கல்கி" ஆசிரியர் அவரைக் கேட்டார். "இங்கே மூன்று நாள் நீங்கள் தங்குவதா யிருந்தால்தான் அவ்விடத்துக்குப் போக முடியும்!" என்று ஸ்ரீ மேகநாதன் சொல்லிவிட்டார்.

குலசேகரப்பட்டினத்தில் நாங்கள் சென்ற பெரிய காரை நிறுத்திவிட்டு, அங்கிங்கெனாதபடி எங்குமே செல்லக்கூடிய அபூர்வ ஆற்றல் படைத்த 'ஜீப்' காரில் ஏறிக் கடற்கரை மணலிலே 'ஜம்'மென்று சென்றோம். அந்தப் பிரயாணம் வெகு சுகமாயிருந்தது. வானத்தில் பூரண சந்திரன் வட்டவடிவத் திலகமாகக் காட்சி அளித்தது. வெண் மணல் பரப்பு என் உள்ளத்தில் ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணியது. உடனே பொங்கி எழுந்தது ஒரு தமிழ்ப் பாடல் :—

கடற்கரை ஓரத்திலே—அங்கே
காணற்கரியதோர் ஜீப்பினிலே—நெஞ்சம்

படக்கென அடித்திடவே—அலை
பாய்ந்து வந்தே ஜீப்பை மோதிடவே-இளந்

தென்றல் தவழ்ந்திடவே—எங்கள்
சீர்ப்பொலி எங்கும் முழங்கிடவே ......!

மேற்படி கவிதை பூர்த்தியாவதற்குள்ளே மணப்பாடு எல்லைக்கு வந்துவிட்டோம். மணப்பாடு எல்லையில் ஒரு சின்னக் கால்வாய் கடலில் கலக்கிறது. அந்தக் கால்வாய்மீது கட்டியிருந்த பாலம் இடிந்து கிடந்தபடியால் தோணியில் ஏறித்தான் மணப்பாடு செல்ல வேண்டியிருந்தது. அழகிய மூவர்ணக் கொடிகளும் தோரணங்களும் கட்டிப் பிரமாதமாக அலங்காரம் செய்திருந்த தோணி தயாராக நின்றது. அதில் நாங்கள் ஏறி உட்கார்ந்ததும், தோணி நகர ஆரம்பித்தது. காற்றின் வேகத்தினால் சில சமயம் அப்படியும் இப்படியும் தோணி சாய்ந்தபோது சிலருக்குப் பயமாக இருந்தது. ஆயினும் ஒரு வித ஆபத்து மில்லாமல் அக்கரை சேர்ந்தோம். கடற்கரையிலிருந்து வீதிகளிலே எல்லாம் தோரணங்கள் கட்டியிருந்தார்கள். வாத்திய கோஷங்கள் முழங்கச் சபாநாயகரை ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

சிற்றுண்டி யருந்துக்குப் பிறகு பொதுக் கூட்டத்துக்குப் புறப்பட்டோம். பொதுக் கூட்டத்துக்குப் போகும் போது மணப்பாடு கிராமத்தைப் பற்றி இன்னும் பல அதிசயமான விவரங்களைத் தெரிந்து கொண்டோம். மணப்பாட்டில் உள்ளவர்களில் 100க்கு 100 பேரும் படித்தவர்களாம். அத்தனை பேரும் கிறிஸ்துவர்களாம். ஆண்களும் பெண்களும் போட்டி போட்டுக் கொண்டு 'கல்கி' படிப்பவர்களாம். எல்லாரும் சிறந்த தேச பக்தியுள்ளவர்கள் என்பதும் வெளியாயிற்று. கடற்கரையில் பொதுக் கூட்ட மேடைக்கு எதிரே ஒரு பெரிய ஜவாஹரின் சிலையை ஸ்தாபித்திருந்தார்கள். பொதுக் கூட்டத்துக்குப் பெண்களும் ஆண்களும் திரள் திரளாக வந்து குழுமியிருந்தார்கள்.

சபாநாயகருக்கும் கல்கிக்கும் அவ்வூரார் ஓலையினால் செய்த அருமையான வர்ண வேலைப்பாடமைந்த பெட்டிகள் முதலியவற்றைப் பரிசளித்தார்கள். மேற்படி அழகான ஓலைப் பெட்டிகளில் சபாநாயகர் பெயரும் கல்கியின் பெயரும் பொறிக்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் சித்திர விசித்திரமாகக் கையால் எழுதியிருந்த உபசார பத்திரங்களைச் சபாநாயகருக்கும் கல்கிக்கும் படித்துக் கொடுத்தார்கள். உபசார பத்திரங்களில் கையாண்டிருந்த தமிழ் நடை அபூர்வமாயிருந்தது.

இந்த உபசாரங்கள் எல்லாம் கிறிஸ்துவ சமூகத்தினரால் செய்யப்படுகிறது என்பதை நம்புவதே கஷ்டமாயிருந்தது. என்னை நம்பச் செய்வதற்காகவே, அவ்

திருச்செந்தூர்க் கடலின் அலை ஓசையும் 'முருகா முருகா' என்று ஒலிப்பதைச் சபாநாயகர் கோஷ்டியார் கேட்கிறார்கள்.





திருநெல்வேலி ஜில்லா ஹரிஜனங்களுக்கு அருந்தொண்டு செய்து இணையில்லாத செல்வாக்குப் பெற்றுள்ள ஸ்ரீ சு. செல்லையா; ஸ்ரீ ஆர். எஸ். ஆறுமுகம்.

ஊரின் கத்தோலிக்க மத குருவாகிய பெரிய சுவாமியார் மேடையில் தோன்றினார்! தோன்றிய தோடல்லாமல், அழகிய செந்தமிழில் எல்லாரும் வியக்கும் வண்ணம் பேசினார். "பாரத நாடு சுதந்திரம் அடையப் போகும் சமயத்தில் இவ்வளவு தூரத்திலுள்ள இந்தச் சிறு கிராம வாசிகளாகிய எங்களுக்குச் சுதந்திர உணர்ச்சி யூட்ட வந்த உங்கள் அனைவருக்கும் நல்வரவு" என்றார்.

சபாநாயகர் ஒரே ஆனந்தத்தில் மூழ்கி யிருந்தார். அந்த ஊர் ஜனங்களின் தேச பக்தியைப் பாராட்டினார். சுவாமியாரின் வரவேற்பையும், மக்களின் உற்சாகத்தை யும் வியந்து வாழ்த்தினார்.

"உங்கள் ஊரின் இடிந்த பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று உபசார பத்திரத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நான் மந்திரி யல்ல. எனக்குக் கொடுக்கப் படும் உபசார பத்திரங்களிலுள்ள குறைகளை எல்லாம் தனித் தனியாகக் குறித்து அந்தந்த மந்திரிகளுக்கு அனுப்பி வைப்பது வழக்கம். அதே போல உங்கள் ஊருக்குப் பாலம் கட்டும் விஷயமாகவும் மந்திரிகளிடம் சொல்லுகிறேன்" என்று தெரிவித்தார்.

"கல்கி" ஆசிரியர் தம்முடைய பேச்சில் உபசார பத்திரங்களின் தமிழ் நடையைப் பாராட்டினார். "உங்களுடைய தமிழ் இந்தக் கடற்கரையிலே மோதும் அலைகளைப் போலவே அழகாகத் துள்ளி விளையாடுகிறது!" என்றார்.

பிறகு அந்த ஊரின் இடிந்த பாலத்தைக் குறிப்பிட்டுப் பேசினார்.

"யுத்த காலத்தில் அயலார் வரக் கூடாதென்று பாலங்களை உடைத்து விடுவது வழக்கம். அதைப் போலவே, யாராவது கெட்டவர்கள் வந்து இந்த நல்ல ஊரைக் கெடுத்துவிடக் கூடாதென்று சோகத்தோடு நீங்களே பாலத்தை உடைத்து விட்டுச் சபாநாயகரைப் போன்ற உத்தமர்களை மட்டும் தோணியில் ஏற்றி ஊருக்குள் கொண்டு வர ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்று நினைத்தேன். ஆனால் நீங்களோ பாலம் கட்ட வேண்டுமென்று கோருகிறீர்கள். அப்படிக் கட்டினாலும் கண்டவர்களை எல்லாம் உள்ளே சுலபமாக விட்டுவிட வேண்டாம்!" என்று கேட்டுக் கொண்ட பின்னர், ஸ்ரீ மெகநாதன், ஸ்ரீ சோமயாஜுலு இவர்கள் மீது தமது கோபத்தை வெளியிட்டார். ஒரு வாத்தியார் "குழந்தை பிறந்தது என்பது என்ன காலம்?" என்று கேட்டாராம். "இறந்த காலம்" என்று பையன் பதில் சொன்னானாம். அது போலவே கல்கி ஆசிரியருக்கு மெகநாதன் பேரிலும் சோமயாஜுலு பேரிலும் பிறந்திருந்த நல்ல எண்ணம் இப்பொழுது இறந்த காலமாகி விட்டதாம். ஏனெனில் அவர்கள் மணப்பாட்டுக்குத் தம்மைக் கூட்டிக்கொண்டு வந்த போது, பிரயாணத்தின் தூரம், படகின் ஆட்டம், மணலைப் புழுதி முதலியவைகளினால் மிகவும் கஷ்டப்பட்டுப் போனாராம். "அப்படித்தான் கூட்டிக் கொண்டு வந்தார்களே! இந்த அழகான ஊரில் இரண்டு நாள் இருந்து விட்டுத் திரும்பிப் போகும்படி ஏற்பாடு செய்தார்களா? இப்போதே பாளையங்கோட்டைக்குப் புறப்பட வேணும் என்கிறார்கள். அவர்களுடைய வற்புறுத்தல் இல்லாவிடில், இந்த ஊரையும் இங்கே வசிக்கும் தமிழன்பு வாய்ந்த ஜனங்களையும் விட்டுப் போகவே எனக்கு மனம் வராது!" என்று கூறினார்.

வந்தனோபசாரங்களுடன் கூட்டம் முடிவடைந்தது. இந்த வைபவங்களை யெல்லாம் நடத்தி வைத்த ஸ்ரீ பிச்சை விலவராயனும், ஸ்ரீ பெலவியர் விக்டோரியாவும் எங்களை மீண்டும் படகில் ஏற்றி அக்கரைக்குப் பத்திரமாய்க் கொண்டு சேர்த்தார்கள். பழையபடி 'ஜீப்' வண்டியில் ஏறிக் குலசேகரப் பட்டினத்துக்குப் புறப்பட்டோம். வழி

யில் மாடசாமிபுரம் என்ற ஹரிஜனச் சேரியில் சபாநாயகருக்கு வரவேற்பு நடந்தது. சபாநாயகர் வரவேற்புக்குப் பதில் கூற எழுந்த போது, கூட்டத்தில் ஒருவர் எழுந்திருந்து தாம் பேச வேண்டுமென்றும், அதனால் சட்ட சபைத் தலைவர் உட்கார வேண்டும் என்றும் சொன்னார். அரசாளும் மந்திரிமார்களையும் சட்டசபை அங்கத்தினர்களையும் பேச்சை நிறுத்தி உட்காரவைக்கும் அதிகாரம் படைத்த சபாநாயகரை, அன்று மாடசாமிபுரத்தில் ஒரு ஹரிஜன உபாத்தியாயர் உட்கார வைத்துவிட்டார்! அவரும் மற்றும் சிலரும் கூறிய குறைகளையெல்லாம் சபாநாயகர் பரிவுடனும் பொறுமையுடனும் சுமார் ஒரு மணி நேரத்துக்குமேல் கேட்டுக் கொண்டிருந்து, குறைகளைத் தீர்க்கத் தம்மாலியன்ற வரையில் முயற்சி செய்வதாகக் கூறினார். அதோடு அவர்களுடைய பெரும்பாலான குறைகளைப் போக்குவதற்கு ஏற்கெனவே சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்றும், அந்தச் சட்டங்களைத் தெரிந்து கொண்டு உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், யாராவது தடை செய்தால் அந்த ஜில்லா காங்கிரஸ் ஊழியர்களான சோமயாஜுலுவுக்கும் மேகநாதனுக்கும் உடனே தெரியப்படுத்த வேண்டும் என்றும் சபாநாயகர் கூறினார்.

குறைகளைப் பற்றி மந்திரிமார்களுக்கு எழுதுங்கள் என்றோ, உத்தியோகஸ்தர்களுக்கு எழுதுங்கள் என்றோ சொல்லாமல் சோமயாஜுலுவுக்கும் மேகநாதனுக்கும் எழுதுங்கள் என்று சபாநாயகர் கூறியது, அவர்களுடைய தொண்டின் பெருமையை நன்கு எடுத்துக் காட்டியது.

திருச்செந்தூர் மனோரஞ்சித விலாஸ் ஹோட்டலில் ஸ்ரீ சீனிவாச ஐயர் அளித்த விருந்தையும் உபசாரத்தையும் மறுபடியும் ஏற்றுக் கொண்டு இரவு பதினொரு மணிக்குப் பாளையங்கோட்டைக்குப் புறப்பட்டோம். ஆழ்வார் திருநகரிக்குப் பக்கத்திலுள்ள தென் திருப்பேரை நண்பர்கள் இரவு 12 மணி வரையில் காத்து நின்று சபாநாயகரை உபசரித்த அன்பின் பெருமையை என்னால் வர்ணிக்க இயலவில்லை.

திருநெல்வேலி

இரவு சுமார் இரண்டரை மணிக்குப் பாளையங்கோட்டை வந்து சேர்ந்தோம்.

பாளையங்கோட்டை ஜாகையில் நாங்கள் படுக்கையை விரித்துக் கொண்டிருந்த போது, மறுபடியும் ஸ்ரீ மேகநாதன் 'ஜீப்'பில் ஏறிக்கொண்டு கிளம்பினார். "இராத்திரி இரண்டரை மணிக்கு இவர் எங்கே புறப்படுகிறார்?" என்று கேட்டேன். "நாளைக் காலையில் நடக்கும் மகா நாட்டுக்கு ஏற்பாடு சரிவர நடந்திருக்கிறதா என்று பார்ப்பதற்கு!" என்றார் சோமயாஜுலு. "இந்த நேரத்திலே போய் என்னத்தைப் பார்க்கப் போகிறீர்?" என்று நாங்கள் தடை செய்ததையும் பொருட்படுத்தாமல் மேகநாதன் போயே போய்விட்டார். அது மட்டுமல்லாமல், காலையில் எங்களை எழுப்புவதற்கும் வந்து விட்டார்.

"சீக்கிரம் எழுந்திருங்கள்; ஒன்பது மணிக்கு ஊர்வலம்!" என்றார்.

நாங்கள் பயந்து போய், "ஐயோ! ஊர்வலமா?" என்று கேட்டோம்.

"பயப்படாதீர்கள். ஊர்வலம் உங்களை வைத்து இல்லை. ஆலயத்தில் நடக்கப் போகும் மகாநாட்டுக்கு ஹரிஜனங்கள் ஊர்வலமாகப் போவார்கள். அந்தக் காட்சியை நீங்கள் அவசியம் பார்க்க வேண்டும்" என்றார்.

"ஊர்வலம் பெரிதாயிருக்குமா? ஐந்நூறு, ஆயிரம் பேர் இருப்பார்களா?" என்று கல்கி கேட்டார்.

"ஐயாயிரம் ஹரிஜனங்கள் இருப்பார்கள்!" என்றார் மேகநாதன். இதை நாங்கள் நம்பவில்லை.

கடைசியில் நாங்கள் போய்ப் பார்த்த போது, ஸ்ரீ மேகநாதன் கூற்று பொய்யாகவே போயிற்று. அதாவது ஊர்வலத்தில் ஐயாயிரம் ஹரிஜனங்கள் இல்லை; பத்தாயிரம் ஹரிஜனங்கள்தான் இருந்தார்கள்!

"சொல்வதைக் காட்டிலும் அதிகமாகச் செய்து காட்டுகிறவர்கள் இந்தத் திருநெல்வேலித் தொண்டர்கள்தான்" என்றார் கல்கி ஆசிரியர். சபாநாயகர் அதை ஆமோதிக்க, நான் உற்சாகமாக ஆதரிக்க, பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

மேற்படி பத்தாயிரம் ஹரிஜனங்களும் சாலையை அடைத்துக் கொண்டு, மற்றவர்களுக்கு இடைஞ்சல் செய்துகொண்டு அலங்கோலமாகச் சென்றார்களா?

ஐந்து ஐந்து பேராக அணிவகுத்துச் சுமார் இரண்டு மைல் நீளமுள்ள ஊர்வலமாக அமைதியுடனும் உற்சாகத்துடனும் சென்று கொண்டிருந்தார்கள். இந்தப் பக்கத்து ஹரிஜனங்கள் இவ்வளவு ஒழுங்கும் கட்டுப்பாடும் பெற்றிருப்பதற்கு ஸ்ரீ ஆர். எஸ். ஆறுமுகம், ஸ்ரீ ச. செல்லையா என்னும் இரு ஹரிஜனத் தலைவர்கள்தான் காரணம் என்று அறிந்தோம்.

நெல்லையப்பர் கோவில் வாசலில் கூட்டம் தாங்கவில்லை. நகர காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீ நெல்லையப்பப் பிள்ளையும், கோவில் நிர்வாக அதிகாரி ஸ்ரீ சீனிவாசய்யரும் பூரண கும்பம், மேள தாளம் முதலியவற்றுடன் சபாநாயகரை வரவேற்றார்கள். சபாநாயகர் கோவிலில் பிரவேசித்தபோது பொது ஜனங்கள், பெருத்த ஆரவாரமும் கோஷங்களும் செய்தார்கள். சபாநாயகர் தம்முடைய காலில் ஏற்பட்ட ஏதோ ஒரு சிக்கலை நீக்கக் கொஞ்சம் தயங்கினார். அங்கே கூடியிருந்த மக்கள் அதைக் கூடப் பொறுக்கவில்லை. "ஆஹா! ஹரிஜனங்களை இவ்வளவு நாட்களாகத் தான் கோவிலுக்கு வெளியிலே நிறுத்தி வைத்திருந்தோம். இனியுமா தாமதிப்பது?" என்பது போலச் சபாநாயகரையும் அவருடன் சேர்ந்த எங்களையும் ஒரே தள்ளாகத் தள்ளிக் கொண்டு போய்க் கோவிலுக்குள் சேர்த்தார்கள்.

கோவில் பிராகாரத்தில் அவ்விதம் தள்ளிக் கொண்டு போகப்பட்ட பொழுது நானும் கல்கியும் கவலையில்லாமல் சென்றோம். ஆனால் திருக்குளத்துக் கருகில் சென்றபோது எங்களுக்கு ஒரே கவலையாகப் போய்விட்டது. ஆலயப் பிரவேசத்துக்கு வந்த சபாநாயகர் ஜனங்களுடைய உற்சாக மிகுதியில் திருக்குளப் பிரவேசம் செய்யும்படி நேர்ந்துவிடக் கூடாதே என்றுதான்! அப்படி ஏதாவது நடந்து விட்டால் பெரிய விபரீதமாக அல்லவா போய்விடும்? "ஹரிஜன வகுப்பில் ஒருவர் சபாநாயகராக வந்திருப்பது பொறுக்காமல் ஜாதி ஹிந்துக்கள் சூழ்ச்சி செய்து ஆலயப் பிரவேசம் என்று அழைத்துக் கொண்டுபோய்க் குளத்திலே தள்ளிவிட்டார்கள்!" என்றல்லவா பழிச்சொல் ஏற்படும்? எனவே, நானும் கல்கியும் ஜாதி ஹிந்துக்களுடைய பிரதிநிதிகளாகச் சபாநாயகரைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டோம். அவரைப் பத்திரமாக நெல்லையப்பரின் திருச்சந்நிதியில் கொண்டு சேர்த்தோம்.

ஆலயத்தில் பூஜை செய்த சிவாச்சாரியாரும் சபாநாயகருக்குச் சுவாமி தரிசனம் செய்து வைப்பதில் மிக்க ஆர்வமுடையவராக இருந்தார். இதைப் பற்றி விசாரித்த போது இன்னொரு விஷயம் தெரிந்தது. முன்னம் மதுரைக் கோவிலைத் திறந்து விட்ட உடனே பட்டர்கள் பூஜை செய்யாமல் பகிஷ்கரித்தார்கள் அல்லவா? அச்சமயம் திருநெல்வேலியிலிருந்துதான் அர்ச்சகர்கள் மதுரைக்குச் சென்றார்களாம்!

எனவே, திருநெல்வேலியின் பண்பாடு பலவிதத்திலும் உயர்ந்ததுதான் என்று நிர்மாணித்துக் கொண்டோம். நெல்லையப்பரையும் காந்திமதி அம்மனையும் ஆறுமுகங்களுடன் பொலிந்த சுப்பிரமண்யரையும் தரிசனம் செய்தோம். ஒவ்வொரு சந்நிதியிலும் சிவாச்சாரியார் சபாநாயகருக்கும் பரிவட்டம் கட்டிப் பிரஸாதம் கொடுத்து "ராஜத்துவாரே ஸர்வா பீஷ்ட ஸித்திரஸ்து" என்று வாழ்த்துரை கூறினார். அதாவது "அரசாங்கத்தின் மூலமாக எல்லாவித மனோரதங்களும் நிறைவேறட்டும்!" என்று வாழ்த்தினார். முன்னேயெல்லாம் இப்படிச் சொல்லி வாழ்த்துவதைக் கேட்டால், கல்கி ஆசிரியருக்கு மிகவும் சங்கடமாக இருக்குமாம். ஆங்கில அரசாங்கத்தையே ஒழித்துக்கட்ட வேண்டுமென்று முனைந்திருப்பவர்களிடம், "ராஜாங்கத்தின் மூலம் எல்லாவித சௌகரியங்களும் கிடைக்கட்டும்" என்று சொல்லுவது சங்கடமான விஷயந்தானே!

"ஆனால் இனிமேல் அப்படி வாழ்த்துவது ரொம்பப் பொருத்தமானதுதான். இப்போது நமது ஒப்பற்ற தலைவர்கள் அல்லவா ராஜாங்கம் நடத்துகிறார்கள்?" என்று கல்கி ஆசிரியர் கூறினதைக் கேட்டு அர்ச்சகரின் முகமும் மலர்ந்தது.

பின்னர் கோவில் பிராகாரத்தில் கூடியிருந்த ஹரிஜன மகாநாட்டுக்கு வந்தோம். அந்தக் கோவில் பிராகாரம் கட்டிய காலத்திலிருந்து மேற்படி பிராகாரம் ஏதாவது ஒரு நல்ல காரியத்துக்குப் பரிபூரணமாக உபயோகப்பட்டிருக்குமானால், அது அன்று நடைபெற்ற ஹரிஜன மகாநாட்டுக்குத்தான் என்று கூறலாம்.

"கண்டறியாதன கண்டேன்" என்னும் இந்தக் கட்டுரையின் தலைப்பும், அன்று அந்தப் பிராகாரம் அளித்த காட்சிக்கு மிகவும் பொருந்தும். இரண்டு பிராகாரங்களிலும் ஜனங்கள் அமர்ந்து பிரசங்கங்களைக் கேட்கும்படியாக, இரு பிராகாரங்கள் சேரும் மூலையில் பிரசங்க மேடை அமைக்கப் பட்டிருந்தது. சுமார் இருபதாயிரம் ஜனங்கள் இரண்டு பிராகாரங்களிலும் அமர்ந்திருந்தார்கள். இவர்களில் முக்கால் வாசிப் பேர் ஹரிஜனங்கள். இதைத் தவிர ஆலயத்துக்கு வெளியிலும் சுமார் இருபதாயிரம் ஜனங்கள் நின்று ஒலிபெருக்கியின் மூலம் பிரசங்கங்களைக் கேட்டுக் கொண்டிருந்ததாக அறிந்தேன்.

(அடுத்த இதழில் முடியும்)


சிலை
'மோகனா'
-சந்திரா-

அந்தக் கோவில் மண்டபத்துக்கு எதிரே, சௌந்தரிய தேவதையோ என்று எண்ணும்படி ஓர் அழகிய மங்கையின் பிரதிமை வைக்கப்பட்டிருந்தது. தூரத்தில் நின்று பார்ப்பவர்களுக்கு நிஜ மங்கைதானோ என்ற ஐயம் எழும். சிறிது சமீபத்தில் வந்ததும் உண்மை புலனாகும். "ஆஹா! என்ன கைத் திறமை!" என்று தம்மையறியாமல் கூறி விடுவார்கள்.

கண்ணைப் பறிக்கும் அழகு வாய்ந்த அந்தச் சிலையைப் பார்த்துக் கொண்டேயிருந்தால் போதும்; பசி தோன்றாது. எவ்விதமான சிந்தனையும் மனத்தைப் புண்படுத்தாது. அந்தச் சிலையின் அழகைப் பருகிய வண்ணம் எத்தனையோ பேர் மணிக்கணக்காக நிற்பார்கள். வேலைவிடக் கூர்மையானவை அந்தச் சிலையின் கண்கள். அந்தக் கண்களில்தான் என்ன மருட்சி! முகத்தில்தான் என்ன பாவம்! இதழ்களில்தான் எத்தகைய மோகனப் புன்னகை! அடாடா, என்ன ஸௌகுமாரம், என்ன தெய்விக அழகு!

அந்த இள நங்கைக்குத் திருஷ்டி பரிகாரமாகக் கீழே ஒரு கிழவன் உட்கார்ந்திருந்தான். அவன் முன்னால் கந்தைத் துணி யொன்று விரிக்கப்பட்டு, அதன் மீது ஒரு தகரப் போணி வைக்கப்பட்டிருந்தது. போவோரையும் வருவோரையும் பார்த்துப் பார்த்து அவன் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான்.

ஆனால், அந்தச் சிலையின் அழகிலே சொக்கியவர்கள் கிழவனை எங்கே கவனிக்கப் போகிறார்கள்? உயிருள்ள பிராணி ஒன்று வறுமையுடன் போராட, உயிரற்ற கல்லின் அழகைக் கண்டு அவர்கள் மயங்கினார்கள். ஏழையின் பசி அவர்களை இரங்கச் செய்யவில்லை. ஆயினும் கிழவன் "ஐயா, அம்மா!" என்று கதறிக் கொண்டேயிருந்தான். கதறிக் கதறி அவன் தொண்டை வறண்டதுதான் மிச்சம்!

வறுமையால் தளர்ந்து மெலிந்த அவனைக் கண்டு சிலர் அருவருப்படைந்தனர். பரிசுத்தமான கோவிலை அசுத்தப் படுத்துகிறானே என்று எண்ணிச் சிலர் அவனுக்கு உபதேசம் செய்தனர். ஆனால் அந்தக் கிழவனுக்கு அப்பொழுது வேண்டியது உபதேசமா, அல்லது உணவா?

அந்தச் சிலையோ வெறும் கல்லாலானது. அதற்கு உணர்ச்சியோ, உள்ளமோ, இயற்கை உயிரோ ஒன்றும் இல்லை. அதன் நெஞ்சமும் கல்தான். ஆனால், உயிரும் உள்ளமும் உணர்ச்சியும் படைத்த ஆத்மா ஒன்று அதன் கீழ் பசியால் வாடுகிறதே, அதைப் பார்த்தும் பார்க்காதது போல் பாவனை செய்து கொண்டு செல்வோரின் நெஞ்சம், அந்தக் கல்லைவிடக் கடினம் போலும்!

அந்தப் பிச்சைக்காரன் கண்களில் ஒன்று, சுத்தமாகப் பார்வையற்றது; மற்றொன்று கொஞ்சம் கொஞ்சமாக ஒளி மங்கி வருவது. அவன் உணவு உட்கொண்டு தான் மூன்று நாட்களுக்கு மேலாயினவே!


அவனும்தான் அந்தச் சிலையைப் பார்க்கிறான். ஆனால் அதைக் கண்டு அவன் வியக்கவோ, புகழவோ செய்யவில்லை. கல்லைப் புகழ்ந்தால் அவனுடைய வயிறு நிரம்பிவிடுமா? வயிறு நிறைய உண்டுவிட்டு, அந்தச் சிலையையும் அதைச் செய்த சிற்பியையும் வாயில் வந்தபடி புகழ்பவர்களுக்குப் பசியின் கொடுமை தெரியுமா? தெரிந்தால் அந்தக் கிழவனை ஏன் உதாசீனம் செய்கிறார்கள்?

இன்று அந்தச் சிலையைச் செய்த சிற்பியைச் சித்தம் குளிரப் புகழும் அவர்கள், உண்மையிலேயே அவன் உயிருடன் இருந்திருந்தால் அவ்விதம் புகழ்வார்களா?

இதையெல்லாம் நினைத்துப் பார்த்ததும் அந்தக் கிழவனுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. தனக்கு எதிரே வீற்றிருக்கும் கடவுளைப் பார்த்தான். அந்தக் கடவுளும் கல் நெஞ்சமுள்ளவர்தானோ? அவருடைய உருவம் கல்லானால் உள்ளமும் கல்தானோ?—ஆம், கல்லாகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் அத்தனை நாட்கள் பசியால் வாடப் பார்த்துக் கொண்டிருப்பாரா? — பாவம், பசி தாங்க முடியாமற் போனால் நீதி, அநீதி என்பதைக்கூட மனம் மறந்து விடும் போலும்!

அதுவரை பக்கத்தில் நின்று அந்தப் பிச்சைக்காரனையே கவனித்துக் கொண்டிருந்தவன், அருகே யிருந்த சிற்றுண்டிச் சாலைக்குச் சென்று அவனுக்கு வேண்

இரண்டாவது பரிசுக்கதை 3



டிய மட்டும் பட்சணம் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தேன். அவசர அவசரமாக அதை வாங்கித் தின்று விட்டு, அவன் என் பக்கமாகத் திரும்பி உட்கார்ந்தான். "அப்பா, குழந்தாய்! நீ நன்றாக இருக்க வேண்டும். மூன்று நாட்களாகப் பசியால் வாடிக் கொண்டிருந்தேன். நேற்றுவரை 'ஏன்?' என்று யாரும் கேட்கவில்லை. நல்ல வேளையாக இன்று உன்னால் என் பசி தீர்ந்தது. என்ன செய்யலாம், ஒரு கண்ணோ போயே போய்விட்டது. இன்னொரு கண்ணோ கொஞ்சம் கொஞ்சமாக மங்கி வருகிறது. என்னால் இனிமேல் என்ன வேலை செய்ய முடியும்? உன்னைப்போலொத்தவர்களைத் தவிர்த்து, எனக்கு யார் உணவு தரப் போகிறார்கள்...?" என்று என்னவெல்லாமோ அவன் சொல்லிக் கொண்டே போனான்.

அவன் சொல்வதை அவ்வளவாகக் கவனிக்காமல் அந்தச் சிலையையே நான் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். கிழவன் கலகல வென நகைத்தான். நான் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தேன்.

"நீயும் இந்தச் சிலையைக் கண்டு மயங்குகிறாயா? வேண்டாம் தம்பி, வேண்டாம். அது வெறும் கல்! அப்படியிருக்கும் போதே அது என்னைப் படுகுழியில் தள்ளி விட்டது! உயிர் இருந்திருந்தால் இன்னும் என்னை என்னவெல்லாம் செய்திருக்குமோ!" என்று கூறி, அவன் ஒரு நீண்ட பெருமூச் செறிந்தான்.

"என்ன, தாத்தா! நீங்கள் சொல்வது விந்தையாயிருக்கிறதே! உங்களை எப்படி அது படு குழியில் தள்ளிற்று?" என்று கேட்டு விட்டுச் சிரித்தேன் நான்.

"உனக்கு எல்லாம் விளையாட்டாக இருக்கலாம், தம்பி! ஆனால் இந்த நிலைமைக்கு நான் வந்ததற்கு இந்தப் பாழும் சிலைதான் காரணம்!" என்றான் கிழவன்.

"எனக்குச் சொல்வீர்களா, அந்த விவரத்தை?" என்று அவனுடன் கேட்டேன்.

"ஆஹா! பேஷாகச் சொல்கிறேன், கேள்' என்று அந்தக் கிழவன் ஆரம்பித்தான்:

★

"இருபது வருஷங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம் அது. நான் அப்பொழுது ஓர் இளம் சிற்பி. பல நாட்களாகக் கற்பனை செய்து வந்த அழகை ஒரே சிலையில் கொட்டிவிட வேண்டுமென்ற ஆசை என்னைப் பிடுங்கித் தின்றது. அதற்காக வெகு சிரமப்பட்டேன். அதன் பயனாக எத்தனையோ சிலைகள் உருவாயின. ஆனால் இதைப்போல் எதுவுமே அமையவில்லை. இதுவே எனது விடா முயற்சியின் வெற்றிச் சின்னம்!

நாலைந்து வருடங்களுக்குமுன் ஒரு நாள் மாலை இந்தச் சிலையின் கண்களைச் சரிப்படுத்திக் கொண்டிருந்த போது, ஒரு சிறு நுனிக் கல் என் இடது கண்ணிற்குள் அதி வேகமாகப் பாய்ந்து விட்டது! அந்த நிலையிலும் ஆசையை இழக்கவில்லை என் நெஞ்சம்! மற்றொரு கண்ணால் சிலையின் கண்

ளைச் சரி பார்த்தேன். ஆகா, என்ன ஆச்சரியம்! அதிர்ஷ்டவசமாக நான் எதிர் பார்த்ததற்கு மேலாகவே சிலையின் கண்கள் அழகு பெற்று விட்டன!

பிறகு இடது கண்ணுக்குச் சிகிச்சை செய்து கொள்வதற்காக எங்கெல்லாமோ சென்றேன். என்னுடைய முயற்சி யெல்லாம் வீணா யிற்று. இழந்த கண்ணை நான் மீண்டும் பெறவே யில்லை!

திரும்பி வந்து பார்க்கையில், என் அருமைச் சிலையைக் காணோம். எங்கெல்லாமோ அலைந்து திரிந்து கடைசியில் இங்கு வந்து சேர்ந்தேன். கண்டேன், என் அருமைச் சிலையை! ஆனால் என்ன பிரயோசனம்? 'கலை, கலை' என்று உயிரை விட்டதால் எனக்கு மனைவி மக்கள்கூட வாய்க்கவில்லை. இப்பொழுது அதை நினைத்தால் எவ்வளவோ வருத்தமாக இருக்கிறது. அந்திய காலத்தில் உதவிக்கு யாருமின்றித் தனியாய்த் தவிக்கிறேன். என்ன சொல்லி, என்ன? அந்தக்





கலையே இப்போது என்னைக் கொலை செய்து விடும் போலிருக்கிறது. எப்படியோ என் வாழ்க்கையில் நானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்டு விட்டேன். இன்று ஜனங்கள் இந்தச் சிலையைப் புகழ்கிறார்கள்; இதைச் செதுக்கியவனை வாழ்த்துகிறார்கள். ஆனால், இதன் சிற்பி ஏழையான நான் தான் என்று சொன்னால் யாராவது நம்புவார்களா? 'இந்தச் சிலையைச் செய்த சிற்பிக்கு என்ன கொடுத்தாலும் தகும்' என்று இத்தனை பேரும் வாய் கூசாமல் சொல்லிக் கொண்டு வழியோடு சென்றவர்கள், எனக்கு இரங்கி — என் நிலைமைக்கு இரங்கி — ஒருவேளை உணவாவது கொடுப்பார்களா? — ஊம் .... என் விதிக்கு யாரைக் குறை கூறி என்ன பயன்?" என்று தன் கதையைக் கூறி முடித்தான் கிழவன்.

நான் ஆச்சரியத்தினால் திகைத்துப் போனேன். அந்த அழகிய சிலையைச் செய்தவன் அதன் கீழேயே இருக்கிறான்; ஆனால் யாரும் அதை அறிந்து கொள்ளவில்லை! எல்லோரும் பிச்சைக்காரன் என்று எண்ணி அவனை ஏளனம் செய்கிறார்கள். உண்மையில் அவன் பிச்சைக்காரனா?— இல்லை; நிகரற்ற கலைச் செல்வம் படைத்தவன்; தன் கைத் திறமையால் உலகத்தையே மயங்க வைத்தவன். அவன் இன்று உலகத்தாரின் கண்களுக்குப் புலப்படாமல், எவ்வித மதிப்பும் இல்லாமல் ஒரு சாதாரண மனிதனுக்கும் கேவலமாக இருக்கிறான்; வயிற்றுச் சோற்றுக்கே வருவோர் போவோரிடமெல்லாம் கையேந்தி நிற்கிறான். ஐயோ, என்ன கொடுமை!


அதற்கு மேலும் அந்தக் கிழவனைப் பார்த்துக் கொண்டு நிற்க என்னால் முடியவில்லை; வீடு வந்து சேர்ந்தேன்.

*

மறுநாள் அந்தச் சிலைக்குச் சமீபம் வந்த போது, என்னைத் தூக்கிவாரிப் போட்டது. ஏனெனில் கிழவன் இருந்த இடம் காலியாகக் கிடந்தது. என்னுடைய திகைப்பைக் கண்ட ஒருவர் அலட்சியமாக, "அங்கே என்ன பார்க்கிறீர்? அந்தப் பிச்சைக்காரனையா? இன்று விடியற் காலம் அவன் இறந்துவிட்டான். இப்பொழுதுதான் நகர சுத்தித் தொழிலாளர் வந்து அவனை அப்புறப்படுத்தினர். அப்பப்பா! இத்தனை நாளும் அவன் உயிரோடு இருந்துகொண்டு இந்தக் கோயிலையே அசுத்தப் படுத்திக்கொண்டிருந்தான். நல்ல வேளை, தொல்லை ஒழிந்தது!" என்றார்.

உலகம் போற்றக் கூடிய ஒரு சிற்பிக்கு நேர்ந்த கதியைத்தான் என்னவென்பது! இதுபோல் எத்தனை மகான்கள் உலகத்தாரின் கண்களுக்குப் புலப்படாமல், சாம்பல் பூத்த நெருப்புப் போல் இருந்து மறைந்து போயினரோ? — யார் அறிவார்?

இவ்வாறு எண்ணிய வண்ணம் நான் அந்தச் சிலையைக் கூர்ந்து நோக்கினேன். அது தனக்கு உயிரளித்தவனின் பிரிவுக்காக ஒரு துளி கண்ணீராவது சிந்தவில்லை!



வானசஞ்சாரம்

இசைத்தேனீ

மே மாதம் 2ஆ. சென்னையில் பாடிய செங்கோட்டை பி. கங்காதரன் சஞ்சாரமான சாரீர பாக்கியம் படைத்தவர். அன்று அவரது பைரவி மிகச் சிறப்பாய் வாய்ந்தது. சரஸ்வதியும் நல்வடிவமாயிருந்தது. உருப்படிகளையும் ஸ்வரப்ரஸ்தாரங்களையும் அழகுபடக் கையாண்டார்.

அன்று அதே நிலையத்திலிருந்து கேட்ட எஸ். வித்யாவின் வீணைகானம் கமகப் பொழிவுக்கும் அழுத்தத்துக்கும் குறிப்பிடத்தக்கது. அவர் நிச்சய ஞானத்துடன் நிதானமாய் ராகங்களைத் தெளிவுச் சித்திரங்களாய் இழைப்பதில் வல்லவர் என்பதை ஸ்ரீரஞ்சனி, கடைசி ராகமாலிகை இவைகளிலும், ஆரம்பத்தில் கல்கடா என்ற அபூர்வ ராகத்திலும் நிரூபித்தார். 13-வது மேளமாம் காயகப்ரியாவின் ஜன்யமான இந்த ராகம் சுத்த நிஷாதப்ரயோகத்தினால் தனிச் சிறப்புக் கொண்டது. அதை வித்யா நன்கு விளக்கிக் காட்டினார்.

4ஆ. சென்னையில் மதுரை டி. வெங்கடேசம் கல்யாணி, அடாணா ராகங்களை நல்வழியில் கையாண்டார்.

7ஆ. சென்னையில் ராஜம் வைத்தியநாதன், திருச்சியில் திருக்கோயிலூர் அலமேலு. இவர்களின் கானங்கள் கவனத்தை ஈர்த்தன. முன்னவர் ஜீவன் நிறைந்த குரலில் விஜயநாகரி, ஷண்முகப்ரியா ராகங்களை விஸ்தாரமாய் வழங்கினார். பின்னவரது தன்யாசி, பந்துவராளி ராகங்களும், உருப்படிகளை வழங்கும் பாணியும் மனதைக் கவர்ந்தன.

8ஆ. திருச்சியில் நிகழ்ந்த டி. பி. ராமகிருஷ்ணனின் கச்சேரி எதிர்பார்த்ததுபோல் தரமாயிருந்தது. ரீதிகௌளை, கரஹரப்ரியா ராகங்கள் நற்சொரூபங்களாய் விளங்கின.

11ஆ. பிற்பகலில் சென்னையிலிருந்து வெளிவந்த ஒரு மணி நேர கானத்தைக் கேட்டவர்கள் பிரமை யடைந்திருப்பார்கள். வசீகர ரஞ்சகமும், அசாத்ய உதவுபடியும் கொண்ட குரல். தெளிவான பிர்க்காப் பொழிவும் வளைவு குழைவுகளும் கலந்த கற்பனை சஞ்சாரங்கள், கல்யாணி, நட பைரவி, வராளி ராகங்களிலும், கடைசி ராகமாலிகையிலும் சமாசியாய் விழுந்தன. உருப்படி ஸ்வரப்ரஸ்தாரங்களை வெகு சாலக்காய்க் கையாண்டார். பாடியவர், பெயர் பெற்ற சேலம் துரைசாமி அய்யங்காரின் புதல்வர் டி. செல்லையய்யங்கார். பக்க வாத்யமாய் ஆர். எஸ். கோபாலகிருஷ்ணனின் வயலினும் சேர்ந்தால் கச்சேரியின் சிறப்பைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

• • •

மே மாதம் 13ஆ. சென்னையில் நிகழ்ந்த சாத்தூர் சுப்ரமணியத்தின் கச்சேரி எதிர்பார்த்ததுபோல் முதல்தரமாயிருந்தது. சுருதி சுத்தத்துடன் கம்பீரமாய் இழையும் சாரீர வளப்பும் பாணி எழிலும் நாளுக்கு நாள் இவரிடம் பெருகி வந்திருக்கின்றன. ஸ்ரீரஞ்சனி, ஹமீர் கல்யாணி இவைகளுக்குப் பின் பல்லவி ராகமாம் சங்கராபரணத்தைக் கற்பனைப் பொழிவுடன் தாராளமாய் விட்டுப் பாடியது கர்ணாமிருதமாயிருந்தது. உருப்படி ஸ்வரப்ரஸ்தாரங்களும் தெளிவா விளங்கின.

14ஆ. சென்னையில் டி. கே. பட்டம்மாள் காம்போதியை ராகம், தானம், பல்லவிக்காக எடுத்துக்கொண்டு முக்கால் மணி நேரம் இன்னிசையாய்ப் பொழிந்தார்.

15ஆ. இரவு திருச்சியிலிருந்து கேட்ட முழு நேரக் கச்சேரி அந்த வாரத்திய முதல்தர நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். பாடியவர் கன்னிடைக் குறிச்சி நாகிநாராயர் என்றாலே போதும். சாரீரத்தில் தங்கு தடையில்லாத உதவுபடி; அழகு கோவையான கற்பனைப் பொழிவுள்ள ஸ்தாயி சஞ்சாரங்கள்; உருக்கமான பாவம்; இவை சேர்ந்து மனங் கவர்ந்தன. அன்று அவரது காம்போதிக்கே முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும். கல்யாணி, பஹுதாரி, நவரஸ கானடா ராகங்களை அடுத்தபடியாகச் சொல்லலாம். ஸ்வரப்ரஸ்தாரங்க ளெல்லாம் நுட்பமான வேலைப்பாடுகளுடன் பிருவாயிருந்தன.

17ஆ. சென்னையில் நடந்த என். சோமசுந்தரத்தின் பாட்டைக் கேட்டவர்கள் அதை ஒரு தனி ரகமாகவே மதிப்பிட்டிருப்பார்கள். அசாத்ய சாதகம். அமோகமான கற்பனைப் பொழிவு; மழைபோலக் கொட்டும் பிர்க்கா; நடுவே இழையும் கமகங்கள். எல்லாவற்றிற்கும் மேலாகக் கேட்போர் மனதில் ஊடுருவிப் பாயும் பாவப் பொழிவு. ஆக எல்லாம் சேர்ந்து அவரது கானம் ஒன்றேகால் மணி நேரம் ரஸிகர்களை இசை வெள்ளத்தில் ஆழ்த்திக் கலகலக்கச் செய்து விட்டது. தோடி, பைரவி ராகங்களாயினும் சரி, உருப்படி ஸ்வரப்ரஸ்தாரங்களாயினும் சரி, ஒன்றுக்குமேல் ஒன்றாக எழில் நிறைந்திருந்தன. ஆனால் இத்தகைய இசைப் பெருவெள்ளத்தில் ராகங்களின் சாயைக் கலப்பு சிறிது தோன்றியது இயல்பு. அவர் மனது வைத்தால் அதை நீக்கிக்கொள்ளலாம்.

18ஆ. சென்னையிலிருந்து பிற்பகல் ஒரு மணி நேரம் கேட்ட கொத்தமங்கலம் ஸ்ரீனிவாசய்யரின் கானம் வழக்கம்போல் கனிசமாயிருந்தது. மணிரங்கு, பைரவி, பிலஹரி இவையோடு ஊர்மிகா என்று மூத்தையா பாகவதரால் சிருஷ்டிக்கப்பட்ட அபூர்வ ராகத்தையும் அழகு வடிவமாய்க் கையாண்டது பாராட்டத் தக்கது.

மற்றக் கச்சேரிகளில் 13ஆ. பாப்பா ஆடார மணியின் கானம் குறிப்பிடத்தக்கது. அவரது இளம் வயதுக்கு மேற்பட்ட ஞானமும் தைரியமும் கொண்டு கல்யாணியைச் சக்கைப் போடு போட்டார். குரலின் கணிப்பையும் சக்தியையும் கண்டு 'மைக்' சற்று பயப்படுகிறது போலும்! இதை அறிந்து மேல் ஸ்தாயி சஞ்சாரங்களில் குரலைச் சற்று மிருதுவாய்க் கொடுப்பாரானால் மைக்கிலும் விகாரமடையாது ச்ராவ்யமாய் ஒலிக்கும்.


14ஆ. சென்னையில் பாடிய மணக்கால் நடராஜனின் பாட்டு தன் குறிப்ப பிர்க்கா வழிக்குச் சற்று விலக்கானது. அன்று அவருக்குத் தொண்டை சிறிது கட்டியிருந்ததாகத் தெரிந்தபோதிலும ஞானபலத்தினால் சங்கராபரணம், யதுகுலகாம்போதி ராகங்களை நிதானமாய்ப் பாடிச் சமாளித்து விட்டார்.

சென்னையில் 17ஆ. கே. ஆர். சந்திரா, 18ஆ. ராமநாதபுரம் வி. கிருஷ்ணன், 19ஆ. வி. பி. ராதா, ஆர். ஜயலக்ஷ்மி இவர்களின் கானங்கள் கவனத்தை ஈர்த்தன.


சங்கீத யோகம்
கல்கி
கர்நாடகம் எழுதிய சங்கீதக்கட்டுரைகள்
விலை ரூ 5-0-0
தமிழ்ப்பண்ணை
தியாகராய நகர் சென்னை.

தாத்தா படம்


ராஜி



1. ஓர் ஊரில் மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். ஒருநாள் அவர்களுடைய தகப்பனார் ஒரு பெரிய படத்தைக் கொண்டு வந்து சுவரில் மாட்டி, "இது உங்கள் தாத்தாவின் படம்: இதை யாரும் தொடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று சொல்லிவிட்டுப் போனார்.



2. "இந்தப் படம் ரொம்ப நன்றாய்த்தான் இருக்கிறது: ஆனால் ஒரே ஒரு குறை!" என்றான் ஒருவன். "என்ன?" என்று மற்ற இருவரும் கேட்டார்கள். அவர்கள் காதோடு காதாக அவன் ஏதோ சொன்னான். இருவரும் "ஆமாம், ஆமாம்" என்று தலையை அசைத்தனர்




3. அடுத்த நிமிஷம் ஓடோடியும் சென்று, ஒருவன் நாற்காலியைக் கொண்டுவந்தான். இன்னொருவன் பேஷான கறுப்பு வர்ணத்தையும், ஒரு சிறு 'பிரஷ்'ஷையும் கொண்டு வந்தான். மூன்றாமவன் அவற்றை வாங்கித் தாத்தாவின் முகத்தில் மீசையைத் தீட்டி வைத்தான்!



4. "ஆஹா! இப்பொழுது எவ்வளவு அருமையாயிருக்கிறது!" என்று மூவரும் தங்கள் கெட்டிக்காரத்தனத்தை ரொம்ப ரொம்ப மெச்சிக்கொண்டார்கள். தாங்கள் எழுதிய மீசையைத் தடவித் தடவிப் பார்த்து மகிழ்ந்தார்கள். ஆனால், "அப்பா பார்த்தால் என்ன சொல்வாரோ!" என்று அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டது. "இந்த ஆபத்திலிருந்து தப்புவதற்கு வழி என்ன?" என்று அவர்கள் யோசித்தார்கள்.




5. "மீசையை மட்டும் அழித்தால் தாத்தாவின் முகமும் கொஞ்சம் கலைந்து போகும். அப்பா தம் விஷமத்தனத்தைக் கண்டு பிடித்து விடுவார்! படத்தைப் பூராவுமே அழித்து விட்டால் தான் படம் எழுதியவரின் மேல் பழியைப் போட்டுவிடலாம்!" என்று தீர்மானித்தார்கள்




6. உடனே ஒரு வாளி நிறையத் தண்ணீரும், ஒரு பெரிய 'பிரஷ்'ஷும் கொண்டு வரப்பட்டன. ஒரு பையன் 'பிரஷ்'ஷும் கையுமாக நாற்காலியின் மேல் ஏறி நின்று கொண்டு அழிக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டான். மற்ற இருவரும் அவனுக்கு உதவி செய்தார்கள்.



7. படத்தைத் தேய்த்துத் தேய்த்து அலம்பியவனுக்கு உடம்பெல்லாம் வியர்த்தது. ஆனாலும் தாத்தாவின் படம் அழிந்ததே தவிர, அவருடைய மீசை மட்டும் அழியவேயில்லை! காரணம், அந்தக் கறுப்பு வர்ணம் எண்ணெய்ப் பசை உள்ளதாயிருந்ததுதான்!




8. காரியம் கைகூடாமற் போகவே, அவர்கள் மூவரும் பரம சாதுக்களைப் போல் படிப்பதற்கு உட்கார்ந்து விட்டனர். இந்தச் சமயத்தில் அப்பா அங்கே வந்தார். "இதென்ன, படம் ஒரே வெள்ளையாயிருக்கிறதே! இந்த மீசை எப்படி வந்தது!" என்று அவர் யோசித்தார்.



9. "அடே, பயல்களா!" என்று அவர் இரைந்து கூப்பிடும்போதே, பையன்கள் பயந்து போய் விட்டார்கள். "இந்த மீசை எப்படி வந்தது?" என்று அவர் அதட்டிக் கேட்டார். அவர்கள் தைரியமிழந்து, தாங்கள் செய்த விஷமத் தனத்தை அப்பாவிடம் சொல்லி விட்டார்கள்.



10. "அட மூட்டாள்களா! தாத்தாவுக்கு மீசை வைக்க அந்தச் சித்திரக்காரர் மறந்து விட்டார். மறுபடியும் அவரிடம் சொல்லி மீசை வைக்க வேண்டுமென்று இருந்தேன். அதற்குள் நீங்கள் வைத்தீர்களே, ஏன் அவசரப் பட்டு அழித்தீர்கள்?" என்றார் தகப்பனார்.



11. பையன்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "அடாடா, முன்னமே தெரியாமற் போச்சே! தெரிந்திருந்தால் மீசையை வைத்து விட்டுச் சும்மா இருந்திருக்கலாம். அப்பாவும் அதைப் பார்த்துச் சந்தோஷப்பட்டு நம்மைத் தட்டிக் கொடுத்திருப்பார்! தாத்தாவும் இப்படிப் படத்தை விட்டு மாயமாய் மறைந்திருக்க மாட்டாரே!" என்று எண்ணி எண்ணி அவர்கள் மூவரும் மிகமிக வருந்தினார்கள்

வெள்ளிமணி

வெள்ளி தோறும் வெளிவரும் தமிழ் வாரப் பத்திரிகை

---ஆசிரியர்: **சாவி**---

புகழ் பெற்ற 'கார்ட்டூனிஸ்ட்' 'சந்துரு'வின் சித்திரங்களுடனும் பிரசித்தி பெற்ற மேனாட்டுப் பத்திரிகைகளைவிட அழகிய பல வர்ண அமைப்புகளுடனும்

1947 ஜூன் மாதம்
6ந் தேதி வெள்ளிக்கிழமை வெளிவரும்

ஏஜன்ஸி வேண்டுவோர் விண்ணப்பித்துக் கொள்ளவும்

விலை அணா இரண்டரை

"வெள்ளிமணி"
தியாகராய நகர்; சென்னை

வருஷ சந்தா ரூ. 7—8—0 ஆறு மாத சந்தா ரூ. 3—12—0

அதிர்ஷ்டசாலி!



1
BUSES STOP HERE
2
BUSES STOP HERE
3
?!
?!
STOP HERE
4
5
BUSES STOP HERE
BUS SERV

பூசணிக்காய்

க. ரா.

ஒரு பிரம்மாண்டமான ஆலமரத்தின் கீழே வழிப்போக்கன் ஒருவன் படுத்திருந்தான். சிருஷ்டித் தத்துவத்தைப் பற்றியும், சிருஷ்டியில் காணப்படும் விசித்திரங்களைப் பற்றியும் அவன் மனம் சிந்திக்க ஆரம்பித்தது. தன்னுடைய கண்களுக்கெதிரே விரிந்து பரந்து வான வெளி முழுவதையும் அடைத்துக் கொண்டு வியாபித்திருந்த அந்த ஆலமரம் அவன் சிந்தனைக்கு விஷயமாயிற்று. "இவ்வளவு பெரிய மரத்துக்குப் பகவான் ஏன் இவ்வளவு சிறிய பழங்களைக் கொடுத்திருக்கிறார்? மரத்தின் அளவுக்கும், அந்தஸ்துக்கும் பொருத்தமாகப் பழம் இருக்க வேண்டுமானால் ஒரு பூசணிப் பழம் அளவாவது இந்த மரத்தின் பழங்கள் இருக்க வேண்டாமா? தரையிலேயே படரும் தன்மை வாய்ந்த பூசணிக் கொடிக்கு ஏன் அவ்வளவு பெரிய பழம்? இதைப் போலவே மனித சிருஷ்டியிலும் பல அநியாயங்கள் ஏன் இருக்கக் கூடாது?" —இவ்வாறாக அவ் வழிப்போக்கனின் எண்ணங்கள் புரண்டன.

வேதாந்தியாக ஆரம்பித்துச் சிருஷ்டியின் மர்மத்தை ஆராயப் புகுந்த அவன், அடுத்த க்ஷணத்தில், "கடவுள் என்று ஒருவர் இருந்தால் இப்படியெல்லாம் சிருஷ்டித்திருக்க மாட்டார்! கடவுள் என்பதே கட்டுக் கதை!" என்ற நாஸ்திக வாதத்தின் எல்லைக் கோட்டில் வந்து நின்றதும் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அவனுடைய கேள்விகளுக்குப் பதிலே போல், ஒரு சிறிய ஆலம் பழம் 'பொத்' தென்று அவன் மார்பில் வந்து விழுந்தது!

வழிப்போக்கன் துள்ளி எழுந்தான். அவ்வளவு உயரத்திலிருந்து தன் மேல் விழுந்த பழம், பூசணிப் பழம் அளவு பெரியதாய் இருந்திருந்தால் இந்நேரம் தன் கதி என்ன ஆகியிருக்கும் என்ற எண்ணம் அவனைத் திடுக்கிடச் செய்தது. அது முதல் பூசணிக்காயையோ, பூசணிப் பழத்தையோ அவன் ஏறெடுத்தும் பார்ப்பதில்லையாம். யாராவது காரணம் கேட்டாலும், "எனக்கு வேண்டாம், பூசணிக்காய்!" என்பானாம்!

நமக்குப் பூசணியைக் கண்டால் அவ்விதப் பயமொன்றும் இல்லை. வழிப்போக்கனுக்கு அது ஆகாத பெயராய் இருக்கலாம்; நமக்குப் பூசணி எப்பொழுதும் ஆகும் பெயர்தான்!

நமது சமையல் திட்டங்களில் பூசணிக்காய் வெகு காலமாக ஒரு முக்கிய ஸ்தானத்தை வகித்து வருகிறது. பூசணிக்காய்க் கறி, அல்லது பூசணிக்காய் சாம்பார் இல்லாத சமாராதனைகள் போஜனப் பிரியர்களின் நன்மதிப்புக்குப் பாத்திரம் ஆகா! சாப்பாடு போடுகிறவர்களுக்கும் பூசணிக்காயைப் போல் வேறு எந்தக் காயும் கட்டி வராது! இப்படி இரு தரத்தாரும் விரும்பும் பூசணியின் மூர்த்தியைப் போலவே கீர்த்தியும் பெரியதாக இருப்பதில் வியப்பென்ன இருக்கிறது!

நாட்டு வைத்தியர்கள் நாவில் அடிக்கடி நடமாடும் 'கூஷ்மாண்ட லேகியம்' என்பது பூசணியைக் கொண்டு செய்யப்படும் லேகியம்தான். 'பூசணிக்காய் லேகியம்' என்றால் நோயாளிக்கு நம்பிக்கை ஏற்படாது என்பதற்காகத் தடபுடலாக ஒலிக்கும் 'கூஷ்மாண்ட' என்ற வடமொழிப் பதத்தை உபயோகப் படுத்துகிறார்கள் போலும்! மேல்நாட்டு வைத்தியர்களும் இதை ஒட்டியே வியாதிகளுக்கும், மருந்துகளுக்கும் அநேகமாக லத்தீன் பெயர்களையே வைப்பது குறிப்பிடத் தக்கது.

இப்பொழுதெல்லாம் பூசணிக்காய்க்குப் புது உபயோகங்களை ரேடியோக்காரர்கள் கண்டு பிடித்துச் சொல்லுகிறார்கள். பூசணிக்காயை ஹல்வா செய்யலாம், ஊறுகாய் போடலாம், பஜ்ஜி செய்யலாம் என்பதையெல்லாம் அவர்கள் மூலம் அறிந்து நாம் வியக்கிறோம்.



'மொழு மொழு' வென்று...

இயற்கையிலேயே உயரத்தில் காய்த்துத் தொங்காத பூசணிக் காயை, உறியிட்டுச் சிலர் வீடுகளுக்கு முன்னால் தொங்க விடுகின்றனர். விபூதி பூசியிருப்பதுபோல் தோற்றமளிக்கும் அதன் சாம்பல் நிறமான உடலின்மேல் குங்குமம் அப்பித் திருஷ்டி பரிகாரமாகப் புது வீடுகளுக்கு முன்னால் கட்டித் தொங்க விடு

வதை இன்றும் காணலாம். சில நாட்களுக்குப் பிறகு அந்தக் காய் நடுத்தெருவில் உடைபட்டிருக்கும். தான் உடைத்ததோடல்லாமல் தன்மேல் சறுக்கி விழும் பாதசாரிகளின் மண்டைகளும், இடறி விழும் சைகிள்காரர்களின் மண்டைகளும் உடைவதற்கு அது காரண பூதமாய் இருக்கிறது!



தான் உடைத்ததோடல்லாமல்...

அஞ்சலையில்லாமல் சாப்பிட்டு வளர்ந்த ஒருவரை — அவர் நமக்கு வேண்டியவராயிருந்தால் — "ஆகா! மனுஷன் நல்ல 'பர்ஸனாலிடி' ஸார்! 'மொழு மொழு' வென்று பூசணிப்பழம்போல் இருப்பார்!" என்கிறோம். நமக்குப் பிடிக்காதவராயிருந்தால், "அவரு, பொத்த பூசணிக்காய் ஸார்! ரேஷன் கடையில் அவன் கட்டாயம் அரிசி வாங்கியிருக்க மாட்டான், எல்லாம் 'ப்ளாக் மார்க்கெட்' வியாபாரம் பண்ணுகிற வேலை!" என்கிறோம். வாழ்த்துவதற்கும் தாழ்த்துவதற்கும் உபமானமாகப் பூசணிக்காய் எவ்வளவு அருமையாகப் பயன்படுகிறது!

ரேஷன் என்பதைக் கனவிலும் கருதியிருக்க முடியாத காலத்தில் எழுந்தது, இந்த 'முழுப் பூசணிக் காயைச் சோற்றில் மறைப்பது' என்ற பழமொழி! இப்பொழுது நம் இலைகளில் இடப்படும் சோறு தான் பூசணி விதையை மறைக்கக் கூடப் போதுமானதாயில்லையே!

ஆனாலும் பழமொழியின் பொருள்படி உண்மை எவ்வளவு பெரிதாக இருந்தாலும், அதை மறைக்கக் கூடிய ஆசாமிகள் முன்னை விடப் பன்மடங்கு அதிகரித்திருக்கின்றனர். ஒரு பூசணிக்காயை விடப் பன் மடங்கு பெரியதான அரிசி, துவரை, உளுந்து, சர்க்கரை மூட்டைகளை மறைக்கக் கூடிய அஸகாய சூரர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துத் தானே வருகிறது!

நாட்டுப் புறங்களில் உள்ள வீடுகளின் கூரை மீது பூசணிக் கொடி கட்டாயம் படர்ந்திருக்கும். பூவும், பிஞ்சும், காயுமாகக் கூரைக்கே அழகு தரும் காட்சி அது! கூரையில் பூசணியும், கொல்லையில் கத்திரியும், வாய்க்கால் ஓரம் வாழையும் உள்ள குடியானவனுக்கு உணவுப் பஞ்சமே கிடையாதாம்.

பூசணிப் பூ மார்கழி மாதங்களில் பீடை நிவர்த்திக்காக வீட்டு வாயில்களில் வைக்கப்படும் வழக்கம் இன்றும் இருக்கிறது. இவ்வளவு அழகான பூவைப் பற்றி நம் கவிகள் பாடியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. "இது முதல் பதினேழு கவிகளால் பூசணிப் பூ மலர்வதைக் கவிஞர் வர்ணிக்கிறார்!" என்று எந்த நூலிலும் பார்த்ததாக எனக்கு ஞாபகமில்லை. "பூவிற் சிறந்தது தாமரைப் பூவே!" என்பதை விட, "பூவிற் சிறந்தது பூசணிப் பூவே!" என்றால், மோனைப் பொருத்தம் உட்பட எவ்வளவு அழகாயிருக்கும்!

இவ்வளவு அருமை பெருமை வாய்ந்த இந்தப் பூசணக்காய்க் கட்டுரையை, "எனக்கு வேண்டாம், பூசணக்காய்!" என்று ஆசிரியர் திருப்பி அனுப்பி விடுவாரோ, என்னமோ!



பையன் :—அசையாமல் நில்லுன்னு நான் அப்பவே சொன்னேன், நீ கேட்கலே......

நகப்பனுர் :—போக்கிரிப் பயலே! வெய்யிலில் நின்னுத்தான் இந்தக் காமிராவிலே நன்னாய் விழும் என்று நீதானேடா சொன்னே? வெய்யிலான்னு நிற்க முடியாமப் பத்திண்டு! எப்படி அசையாமல் நிற்கிறதாம்?

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

178. இதயத்தைத் தாக்கிவிட்டது, துயரம்!

ஆசிரமத்து மண்ணோடு மண்ணாகத் தேரில் கிடந்த சீதையை அப்படியே வெளியே எடுத்துத் தோளின் மேல் வைத்துக் கொண்டு ஆகாய மார்க்கமாகச் செல்லுகிறான் ராவணன்.

இறக்கை அறுபட்டவனாய்த் தரையில் மூர்ச்சித்துக் கிடந்த ஜடாயு, கொஞ்சம் மூர்ச்சை தெளிந்து ஆகாயத்தை எட்டிப் பார்த்தான்.

தானன தானன
தான தன்னன

ஏகினன் அரக்கனும் ;—
எருவை வேந்தனும்
மோகவெம் துயர்சிறி(து)
ஆறி மூசுற,
மாகமேல் நோக்கினன்,—
வஞ்சன் வல்லையில்ப்
போகுதல் கண்(டு) அகம்
புலர்ந்து சொல்லுவான்.

[ஏகினன் அரக்கன்: அரக்கன் ஆகாயத்தில் போகிறான்; எருவை வேந்தனும்: கழுகு வேந்தனான ஜடாயுவும்; மோக வெந்துயர் சிறிது ஆறி மூசுற: மூர்ச்சித்துப் போகும்படியான கொடும் துயரத்தை விட்டுச் சிறிது ஓய்ந்து; மாக மேல் நோக்கினன்: ஆகாயத்தின் மீது பார்வையைச் செலுத்தினான்; வஞ்சன் வல்லையில் போகுதல் கண்டு: ராவணன் வேகமாகப் போவது கண்ணுக்குத் தென்பட்டது; அகம் புலர்ந்து சொல்லுவான்: மனம் வெந்தவனாய்ச் சொல்லுகிறான்.]

"அரக்கனைப் பின்தொடர இறகில்லையே; அடடா, நம் அருமை மக்கள் இங்கில்லையே! நம்முடைய மருமகளுக்கு நேர்ந்த துன்பத்தை நீக்கினேன் என்னும் புகழ் எனக்கு இல்லாமலல்லவா போகிறது!"

'வந்திலர் மைந்தர் ; நம்
மருகிக்(கு) எய்திய
வெந்துயர் துடைத்தனென்
என்னும் மெய்ப்புகழ்
தந்திலர் ; விதியினார்
தரும வேலியைச்
சிந்தினர் ; மேல்இனிச்
செயல்என் னுங்கொலோ ?'

[வந்திலர் மைந்தர்: ராமலக்ஷ்மணர் இங்கில்லையே; இங்கிருந்தால் ராவணனைக் கொன்று சீதையை மீட்டு விடலாமே! நம் மருகிக்கு எய்திய வெந்துயர் துடைத்தனென் என்னும் மெய்ப் புகழ் தந்திலர்: நம்முடைய மருமகள் சீதைக்கு ஏற்பட்ட துயர் என்னால் நீங்கியது என்று அவர்கள் சொல்லுவார்களே; அது எனக்கு இல்லாமல் போய்விட்டதே! விதியினார் தரும வேலியைச் சிந்தினர்: தருமத்துக்காக ஏற்பட்ட வேலியை அல்லவா விதி சிதைக்கிறது—தருமத்தைக் காக்க வந்தவன் ராமன். அவனுக்கு ஏதாவது நேர்ந்தால் தர்மந்தான் நிலைக்குமா?]

ஜடாயு யோசனை பண்ணுகிறான்: "சீதை பக்கத்தில் ராமலக்ஷ்மணர்கள் இருந்திருந்தால் இந்தக் காரியம் நடந்தா இருக்கும்?"

'வெற்றியர் உளர்எனின்
மின்னின் நுண்ணிடைப்
பொற்றொடிக்(கு) இந்நிலை
புகுதற் பாலதோ ?
உற்றதை இன்னதென்(று)
உணர கிற்றிலென் ;
சிற்றவை வஞ்சனை
முடியச் செய்ததோ !'

[வெற்றியர் உளர் எனின்: ராமலக்ஷ்மணர்கள் ஆகிய வீரர்கள் பக்கத்திலிருந்திருந்தால்; மின்னின் நுண்ணிடைப் பொற்றொடிக்கு: மின்போலும் இடையுடைய சீதைக்கு: (பொன் வளையம் தோளில் அணிந்த பெண்)—இந்நிலை புகுதற்பாலதோ: இந்த ஆபத்து வந்திருக்குமா! ஒருக்காலும் வந்திராது. உற்றதை இன்னது என்று



"என்னப்பா, வாயைத் தொறத்துக்கோ. மிட்டாயி போடறேன்னு சொல்லிண்டு இருக்கேன். நீ வாயையே தொறக்க மாட்டேங்கிறயே!"

"என்னடா, ராஜா! நானு நாழியா நான் வாயைத் தொறந்துண்டுதானேடா இருக்கேன்!"

[உணர்கிற்றிலேன்: இன்ன விதம் இது நேர்ந்தது என்பது என் யோசனைக்கு எட்டவில்லையே; சிற்றவை வஞ்சனை முடியச் செய்ததோ: கைகேயியே உளவாய் இருந்து இதைச் சாதிக்கச் செய்தாளோ! வேறு விதத்தில் காரணம் கண்டு பிடிக்க முடியவில்லையே!]

* * *

"ராமன் சாமானியப் பட்டவனா! அவனது சக்திதான் என்ன! ஆதிசேஷ சயனத்தில் பள்ளி கொண்ட திருமால் அல்லவா அவன்! இந்த அரக்கன் ராமனை வெல்லுகிறது என்று உண்டா?"

'பஞ்சணை பாம்பணை—
யாகப் பள்ளிசேர்
அஞ்சன வண்ணனே
இராமன் ஆதலால்,
வெஞ்சின அரக்கனால்
வெல்லற் பாலனோ,—
வஞ்சனை இழைத்தனன்
கள்ள மாயையால்.

[பஞ்சு அணை பாம்பணையாக: ஆதிசேஷச் சயனமே பஞ்சு மெத்தையாக; பள்ளிசேர்: பள்ளி கொண்டுள்ள; அஞ்சன வண்ணனே இராமன் ஆதலால்: கருநிற வண்ணனான திருமாலே ராமனாதலால்:]


* * *

இப்படியெல்லாம் ஜடாயு புலம்பிக் கொண்டிருக்கும்போது, அறுபட்ட இறக்கைகளிலிருந்து இரத்தம் மிகுதியாக வழிந்து, உடல் மிக்க சோர்வு அடைந்து விட்டது. அதோடு, ராம லக்ஷ்மணர்கள் என்ன பாடு படுவார்கள் என்ற பரிவும் சேர்ந்து அவன் இதயத்தைத் தாக்கிற்று. அப்பாவி ஜடாயு என்ன செய்வான்?

அஞ்சிறைக் குருதியால்
அழிந்து சோர்வுற,—
வஞ்சியை மீட்கிலேன்
என்னும் மானமும்,
செஞ்செவே மக்கள்பால்ச்
சென்ற காதலும்
நெஞ்சுறத். துயின்றனன்
உணர்வு நீங்கலான்.

[அஞ்சிறைக் குருதியால்: அழகான இறக்கையின் அடிகளிலிருந்து வடிந்த இரத்தப் பெருக்கால்; அழிந்த சோர்வுற: உடல் வலி விழந்து சோர்வுற; வஞ்சியை: சீதையை; செஞ்செவே மக்கள்பால்ச் சென்ற காதலும்: மிகச் செம்மையான குணம் வாய்ந்த ராம லக்ஷ்மணர்களைக் குறித்துச் சென்ற பரிவும்; நெஞ்சு உற: இதயத்தைத் தாக்க; துயின்றனன்: உறங்கிவிட்டான், உணர்வு நீங்கிவிட்ட காரணத்தால்.]

ஜடாயு அபூர்வமான பலம் உள்ளவன். சிறந்த வீரன். இரத்தம் சிந்தியதால் உடம்புக்குச் சோர்வு ஏற்பட்டது உண்மைதான்; ஆனாலும் அதனால் மயக்கம் வந்து விடவில்லை. துயரம் வந்து இதயத்தைத் தாக்கியதாலேயே உணர்ச்சி சுழன்றது என்று கவிஞர் குறிப்பிடுகிறார். ஜடாயுவான பாத்திரம் அப்படி அமைந்து கிடக்கிறது!



கிராக்கிக்கு மெத்தனையோ குறைவாகத்தான்

எங்களிடம் சரக்குகள் விற்பனைக்குள்ளன. சிறந்த சாமான்களுக்கு வேறு விளம்பரம் ஏன், இதுவே எப்பொழுதும் எனது கொள்கை. எனினும், எங்கள் வர்த்தக முத்திரைக்கிருந்துவரும் நன்மதிப்பானது, அந்த முத்திரையை பிரசித்திப் படுத்துவதையே ஆதாரமாகக் கொண்டதென்பதை நாம் மறந்துவிடலாகாது. பிரசித்தப் படுத்துவது எதற்காகவென்றால், "நாங்கள் இன்னும் வேலை தொடர்ந்துதான் வருகிறோம். கூடிய சீக்கிரம் போதுமான சரக்குகள் உங்களுக்குக் கிடைக்கச் செய்வோம்" என ஆவசியக்காரர்களுக்கு உறுதி கூறவேதான்.

கம்பளி: பூராவும் கம்பளி ஸூப்பர் ப்ளாங்கெட்டுகளும் பிரயாண ரக்குகளும்—ட்வீடுகளும், நேரிய கம்பளி தினுசுகளும், யூனியன் ஷர்ட்டிங்குகளும்.

பருத்தி: ஸெல்லா ஷர்ட்டிங்குகளும், நேரிய லாங்கிலாத்தும்—கோல்ட் ஸ்டாண்டர்ட் ஷர்ட்டிங்குகள்—லேம லாங்கிலாத்தும், சாயம் தோய்த்ததும்—ஸாம்ரா ஸூட்டிங்குகள் — டஸ்ஸோர்கள் — ட்ரில்கள் — டிவில்கள் வகையரு......

பட்டு: 44"/45" அகலம், பற்பல சாயல்களில்.

தயாரிப்போர்கள்: தி பங்களூர் வூலன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கோ., லிட்.

ஏஜண்டுகள், காரியதரிசிகள், ட்ரெஷரர்கள்

பின்னி & கோ.

(மெட்ராஸ்) லிட்.

"ஆடு மார்க்கு"—அணிவதற்குகந்த துணிகளின் அறிகுறி.

பஸ் நெ. 3

லல்லு

"இந்த 'ரஷ் அவ'ரில் இளம் பெண்கள் எதற்குத் தன்னந் தனியாக 'பஸ்'ஸில் ஏறி, இப்படி இடியும் குத்தும் பட்டு அவதிப்பட வேண்டும்?"

அதிகப் பிரசங்கி; முன் பின் தெரியாதவன்; அதுவும் ஒரு வாலிபன்!—இவ்விதம் பேசினால் உமா எப்படிப் பொறுப்பாள்? அனுதாபத்தின் காரணமாகத்தான் அவன் அவ் வார்த்தைகளைச் சொன்னான் என்று அவளுக்குப் படவில்லை; வெறும் குறும்புத்தனத்தின் காரணமாகச் சொன்னதாகவே பட்டது.

படித்த நவநாகரிக ரமணியும், ஆணும் பெண்ணும் சமம் என்று சாதிக்கும் புதுமைப் பெண்ணுமான அவள் உடனே பெண் குலத்தின் மானத்தைக் காத்துக் கொள்வதற்காகப் போர்க் கோலம் பூண்டாள்! படபடத்து, "இந்த 'ரஷ் அவ'ரிலும் முக்கியமான காரியத்தை முன்னிட்டுத்தான் போய் வரவேண்டியிருக்கிறது. 'டாக்ஸி'யோ, ரிக்ஷாவோ அமர்த்திக் கொண்டு போக நான் ஒன்றும் ஜட்ஜு வீட்டுப் பெண் ணின் அல்ல. இடி பட்டால் பட்டுவிட்டுப் போகிறேன்; உங்களுக்கு அதைப் பற்றி ஏனோ கவலை?" என்று துடுக்குத்தனமாகப் பேசிவிட்டாள்.

"ஸோரர் கண்கள் பாழும் கிணறுகள் அல்ல; அவை ஆவல் நிறைந்த ஊற்றுக்கள்!" என்று சொன்னவனின் வாய்க்குள் 'பர்மிட்' கிடைத்தால் ஒரு வீசை சர்க்கரையைத் திணிக்க அவள் அப்போது தயாரானாள்! ஏனெனில், பஸ்ஸிலேயிருந்த அவ்வளவு பேரும் அன்று ஏதோ 'பாம்பு—கீரி' சண்டை நடக்கப் போகிறதுபோலல்லவா அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார்கள்!

அந்த வாலிபன் என்னவோ அவளுக்குப் பதில் சொல்ல வாயெடுத்தான். ஆனால் அவனுடன் இருந்தவன், அவன் நண்பன் போலும்—குறுக்கிட்டு, "டேய், துரை! இதோடு நிறுத்திக் கொள். உனக்கு ஏன் இந்த வம்பு?" என்று அன்புடன் கடிந்து கொள்ளவே, அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டு மௌனம் சாதித்தான்.

வெளிக்கு வெகு விறைப்பாக நின்றாலும் உமாவின் நெஞ்சு மட்டும் 'ரோட் ரோல'ரைப் போல மெதுவாக அடித்துக் கொண்டது. ஓடுகிற பஸ்ஸிலிருந்து உடனே குதித்து விடலாமா என்றுகூட அவளுக்குத் தோன்றியது.

வீடு வந்து சேர்ந்தாள். அந்தச் சம்பவம் அவள் உள்ளத்தில் அழியாத இடம் பெற்று விட்டது. எல்லாக் கதா நாயகர்களையும் போல அந்த வாலிபன் அவளுக்கு மன்மதனாகக் காட்சி யளிக்கவில்லை. கறுத்த மேனி; உயர்ந்த — ஆனால் இளைத்த தோற்றம். முகத்திலே அலாதிக் குறுகுறுப்பும் களையும் குடிகொண்டு, ஆடவரைப் பார்த்தால் கண்ணை மூடிக்கொண்டு விட வேண்டும் என்ற உமாவின் எண்ணத்தை அடியோடு மாற்றி, இன்னும் ஒரு முறை பார்க்க வேண்டும் என்ற ஆவலையே அவன் முகம் உண்டுபண்ணுவதாயிருந்தது.

இது என்ன, கண்டதும் காதலா? அதுவும், எடுத்ததுமே சண்டை போட்டுக் கொண்ட ஒருவனிடம்?

அப்போது உமா 'இண்டர்' பரீட்சை எழுதிவிட்டு முடிவுக்காகக் காத்திருந்தாள். வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து மேலே படிக்க வேண்டுமென்பது அவள் விருப்பம். அவளுடைய பெற்றோருக்கு இரண்டே பெண்கள். முதல் பெண்ணைப் போலவே இரண்டாவது பெண்ணுக்கும் சீக்கிரமே கல்யாணம் பண்ணி, 'குழந்தையும் குட்டியு'மாகக் கண்டு ஆனந்திக்க வேண்டுமென்று அவள் பாட்டியும் தாயாரும் விரும்பினர். "கல்யாணத்துக்கு முயற்சி செய்வதைச் செய்யுங்கள். அதுவரை நான் வீட்டிலே



எதற்குச் சும்மா உட்கார்ந்திருக்க வேண்டும்?" என்று கெஞ்சிக் கூத்தாடித் தன் தகப்பனாரைச் சரிபண்ணிக் கொண்டாள் உமா. அவள் கல்லூரியிலே இடம் பெறும் முயற்சியில் ஒருவரைக் காணச் சென்று திரும்பும் போதுதான் மேற் சொன்ன சம்பவம் நிகழ்ந்தது.

*

கடைசியில் உமா வைத்தியக் கல்லூரியில் சேர முடியாமலே போயிற்று. மேலே படிக்க வேணும் என்றால் பி. ஏ. படித்தால் போதும் என்று அவள் தாயார் 'அவசரச் சட்டம்' பிறப்பித்து விட்டாள். தந்தை என்ன செய்வார், பாவம்! 'வீட்டுச் சுதந்திரத்தைத்தான் பறி கொடுத்து விட்டோம்; நாட்டுச் சுதந்திரமாவது கிட்டுமா, பார்க்கலாம்' என்று அரசியலில் ஈடுபட்டு விட்டார்!

உமாவின் கல்லூரி இயற்கையன்னையின் எழில் நிறைந்த ஓரிடத்திலே அமைந்திருந்தது. அந்த எழிலிலே அவள் மனம் லயித்து மணிக் கணக்காகப் பேச்சு மூச்சில்லாமல் உட்கார்ந்திருப்பாள் — அதாவது, உமா இப்போது அந்தப் பாழும் காதல் வசப்பட்டு விட்டாள் என்று பேயர்கள் அர்த்தம் பண்ணிக் கொள்ள வேண்டும்!



அந்த ஆவணி மாதக் கடைசியில் அவள் அத்திம்பேர் மூலமாக ஒரு வரன் வந்தது. பிரசித்தி பெற்ற வாரப் பத்திரிகை யொன்றில் மாப்பிள்ளை சித்திரம் எழுதும் வேலை பார்ப்பவரென்றும், மாமியார் — நாத்தனார் என்று ஒருவித நச்சுப் பிடுங்கலும் இல்லையென்றும், பிள்ளையை உமா நேரில் பார்த்தால்தான் எதுவும் நிச்சயமாகச் சொல்ல முடியும் என்றும் அவர் எழுதியிருந்தார். இந்த வரனை எப்படியாவது முடித்துவிட வேண்டும், புரட்டாசியில் கல்யாணத்தைப் பண்ணிவிட வேண்டும் என்று தாயார் குதியாய்க் குதித்தாள்.

'பெண்ணைப் பார்க்க வருகிறோம்!' என்று மாப்பிள்ளை வீட்டார் சீக்கிரமே நாள் குறித்து விட்டார்கள். அந்தப் பொல்லாத நாளும் வந்தது. அழகு பண்ணிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை உமாவுக்கு இருந்தாலல்லவா அவள் அலங்காரம் சோபிக்கும்? எனவே, அவள் பண்ணிக் கொண்ட சிங்காரம் அம்மாவுக்குத் திருப்தியளிக்கவில்லை.

வெட்கங் கெட்ட அவள் மனம் அன்று பஸ்ஸில் கண்ட 'துரை'யின் நாமத்தையே சதா ஸ்மரித்துக் கொண்டிருந்தது. பஸ்ஸில் அவன் நின்றிருந்த தோற்றம் அவள் அகக் கண்ணில் அடிக்கடி காட்சியளித்தது. 'இது என்ன அசட்டுத்தனம்?' என்று எண்ணி, நெஞ்சைத் திடப்படுத்திக் கொள்ள எவ்வளவோ முயன்றாள்; முடியவில்லை.

அதற்குள் வாசலில் 'பூம், பூம்' என்று கார் 'ஹாரன்' அடித்துக்கொண்டு வந்து நின்றது. உமா திடுக்கிட்டு வேண்டா வெறுப்புடன் அவர்கள் முன் காட்சியளிக்கத் தயாரானாள்.

குனிந்த தலை நிமிராமல் சம்பிரதாயத்தையொட்டிப் பெரியவர்களுக்கெல்லாம் நமஸ்காரம் பண்ணிவிட்டு, வீணையை எடுத்துக் கொண்டு வந்து உட்கார்ந்தாள். சுருதி கூட்ட அவள் தந்திகளை மீட்டியபோது, "டேய், துரை! என்ன பாட்டு வாசிக்கச் சொல்லட்டும்?" என்றது அவளுக்குத் தெரிந்த குரல்!

அவ்வளவுதான்; அந்த ஆளும் அங்கே இருந்தவர்களும் அவளைச் சுற்றிச் சுழல ஆரம்பித்து விட்டார்கள்! தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தலை நிமிர்ந்து பார்த்தாள்! அந்தப் பொல்லாத வாலிபன் வெற்றியுடன் அவளைப் பார்த்து ஒரு குறும்புச் சிரிப்புச் சிரித்தான்!

உமாவை வெட்கம் பிடுங்கித் தின்றது. மடியிலிருந்த வீணையைக் கீழே நழுவ விட்டு விட்டுத் தன் அறையை நோக்கி எடுத்தாள் ஓட்டம்!

★

கல்யாணமான மறுநாள்; உமாவை அழைத்துக் கொண்டு துரை வெளியே கிளம்பினான்.

“எங்கே போகிறோம்?” என்று கேட்டாள் உமா.

பதில் இல்லை.

மயிலாப்பூர் 'பஸ் ஸ்டாண்'டுக்கு வந்து இருவரும் நின்றார்கள்.

“எங்கேதான் போகிறோம், சொல்ல மாட்டீர்களா?”

“‘பாரீஸ்’ வரைக்கும்!”

“அங்கே போய்......?”

“அதே பஸ்ஸில் திரும்பி விடுவோம்!”

“இது என்ன வேடிக்கை?” என்று எண்ணி உமா சும்மா இருந்தாள்.

மூன்று நாலு பஸ் வந்து நின்று கிளம்பியும், துரை எதிலும் ஏறவில்லை! உமா பொறுமை இழந்து, “இது என்ன, இங்கேயே நின்று கொண்டிருக்க வேணுமா?” என்றாள்.

அதே சமயம் 3-ம் நெம்பர் பஸ் வந்து நின்றது. 'நம்பர் பிளேட்'டை ஒரு முறை பார்த்துவிட்டு, உமாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய் அதில் ஏறிக் கொண்டான் துரை. சீட்டில் உட்கார்ந்ததும், “பஸ்ஸின் நம்பரைப் பார்த்தாயா?” என்றான்.

“ஏன், 4646!” என்றாள் உமா.

“அதில் என்ன விசேஷம்?” என்று கேட்டுவிட்டு, உமாவை அர்த்தபுஷ்டியுடன் ஒரு பார்வை பார்த்தான் துரை.

மின்னலைப்போல் பளிச்சென்று அவளுக்கு விளங்கிவிட்டது: அவர்கள் முதல் முதலாகச் சந்தித்த 'பஸ்'ஸின் இலக்கமும் 4646தான்!

“அன்று சந்தித்த அதே பஸ்ஸிலேயே 'ஊர்வலம்' செல்ல வேண்டுமென்பது உங்கள் விருப்பம் போலும்!” என்று சொல்லி, உமா சிரிக்காமல் சிரித்தாள்!

'பஸ்' நெ. 3 புழுதியைக் கிளப்பிக் கொண்டு சென்றாலும், புது மணம் புரிந்த அந்தத் தம்பதிகள் இருவருக்கும் அது புஷ்பக விமானம் போலவே இருந்தது!



எஜமான்:—முருகா, நீ குடித்துவிட்டு நேற்று இரவு எங்கேயோ தெருவில் பிரக்ஞையற்று விழுந்து கிடந்தாயாம். நாலைந்து பேராக உன்னைத் தூக்கிக் கொண்டு வந்து இங்கே விட்டார்கள். இங்கேதான் நீ இருக்கிறாய் என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

முருகன்:—எஜமான், உங்களுடைய பெயரும் விலாசமும் அச்சடித்த விஸிட்டிங் கார்டை நான் எப்பொழுதும் சட்டைப் பையில் வைத்திருப்பேன்!

★

“பார்த்தசாரதி முதலியார் கார் வாங்கியிருக்கிறாரே, பார்த்தீர்களா? அது பழைய காரா யிருந்தாலும் ரிப்பேருக்காகக் காலணாக் கூட அவர் செலவழிக்க வில்லையாமே!”

“ஆமாம், அந்தக் காரை ரிப்பேர் செய்தவன்கூட அப்படித்தான் சொன்னான்; முதலியார் காலணாக்கூடக் கொடுக்காமல் அவனை ஏமாற்றி விட்டாராம்!”

★

புருஷன் (மனைவியைப் பார்த்து):—சீக்கிரம் வா! குழந்தை அழுகிறது. என்ன சமாதானம் செய்தாலும் கேட்க மாட்டேன் என்கிறது! தொட்டிலை ஆட்டி ஆட்டி என் கைதான் வலிக்கிறது; அது தூங்குகிற வழியாயில்லை.

மனைவி:—இதோ ஐந்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன். 'அம்மா வந்து பாட்டுப் பாடித் தொட்டில் ஆட்டுவாள்' என்று சொல்லிச் சமாதானம் செய்யுங்கள்!

புருஷன்:—அப்படியும் சொல்லிப் பயமுறுத்திப் பார்த்தேன். அது கேட்க மாட்டேன் என்கிறது!

★

அவர்:—ஏன் ஸார், அவர் உங்களுக்கு உறவா?

மற்றவர்:—ஆமாம், எனக்குத் தூர பந்து அவர்!

அவர்:—உங்கள் முக ஜாடை அவருக்கு இருக்கிறதே! சகோதரர் மாதிரியல்லவா இருக்கிறீர்! தூர பந்து என்கிறீர்களே?

மற்றவர்:—ஆமாம், சகோதரர்தான். என் மூத்த தமையனார் அவர். அவருக்கு அடுத்தபடி ஏழு சகோதரர்கள் இருக்கிறார்கள். நான் கடைசி. எனக்கும் அவருக்கும் இடையில் ஏழு பேர் இல்லையா? அதனால்தான் தூர பந்து என்கிறேன்!


★

“கடன் அதிகமாகி விட்டது. அதைத் தொலைத்து விட்டால் மன நிம்மதியோடு இருக்கலாம்!”

“அதற்கு என்ன வழி?”

“யாராவது ஒரு ஐந்நூறு ரூபாய் கடன் கொடுத்தால் போதும்!”


அருமையான பற்கள்!
உங்கள் சொத்துக்களுடன் பற்களையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்!
Gibbs
S.R.
FOR TEETH AND GUMS
GSR. 26-60 TM
D. & W. GIBBS LIMITED, LONDON, ENGLAND



சந்திர ஹாரம்

ஆசிரியர்: பிரேம்சந்த் | மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

மறுநாள் காலையில் ரமேஷ்பாபு தம் வழக்கப்படி ஐந்து மணிக்கே எழுந்தார். ஸ்நானம், சந்தியாவந்தனம் முதலியவைகளை முடித்துக் கொண்டு உலாவப் புறப்பட்டார். சிறிது நேரம் உலாவி விட்டு, எட்டு மணிக்குத் திரும்பி வந்தார். ரமாநாத் அப்பொழுதும் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் எப்பொழுதுமே வெகு நேரம் வரை தூங்குபவன். போதும் போதாக் குறைக்கு முதல் நாள் இரவு விடிய விடியச் சதுரங்கம் வேறு ஆடியிருந்தான். அதனால் மணி ஒன்பதரை அடித்த பிறகும்கூட அவன் விழித்துக் கொள்ளவில்லை. ரமேஷ்பாபு அவனை எழுப்பினார்.

அவன் தூக்கக் கலக்கத்தில் கோபித்துக் கொண்டு, "நான் தூங்கினால் உங்களுக்கென்ன? எதற்காக இப்படி எழுப்பித் தொலைக்கிறீர்கள்?" என்று சீறி விழுந்தான்.

"நீ வேலைக்கு மனு கொடுக்க வேண்டாமா?"

"எல்லாம் நீங்களே கொடுத்துக் கொள்ளுங்கள்."

"துரை உன்னைப் பார்க்க வேண்டும் என்றால், உனக்குப் பதிலாக நானே போய்ப் பார்ப்பது, என்ன?"

"என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். என்ன வேண்டுமானாலும் நீங்களே செய்து கொள்ளுங்கள்!" என்று சொல்லிவிட்டு, ரமாநாத் மறுபடியும் படுத்துக் கொண்டு விட்டான்.

ரமேஷ்பாபு சாப்பாட்டை முடித்துக் கொண்டு, ஆபீஸுக்குப் புறப்படத் தயாரானார். ரமாநாத் விழித்துக் கொண்டு, கண்களைத் தேய்த்த வண்ணம், "இதோ, நானும் உங்களுடன் வந்து விட்டேன்!" என்றான்.

"தூக்கத்தில் நீ கும்பகர்ணனுக்கு அண்ணன் போலிருக்கிறது. எவ்வளவு எழுப்பியும் நீ அசைந்து கொடுக்கவில்லையே! அது கிடக்கட்டும்; அவசரப்படாமல் முகத்தைக் கழுவிக் கொண்டு சாப்பிட்டு விட்டே புறப்படு! அதுவரை நான் உனக்காகக் காத்திருக்கிறேன்" என்றார் ரமேஷ்பாபு.

ரமாநாத் அவசர அவசரமாகச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, அவருடன் ஆபீஸுக்குப் புறப்பட்டான்.

போகும் பொழுது வழியில் ரமேஷ்பாபு சிரித்துக் கொண்டே, "என் ரமாநாத், நேற்றைக்கு என் வீட்டிலேயே தங்கி விட்டாயே! நீ உன் வீட்டுக்குப் போய் என்ன சொல்லுவாய்?" என்று கேட்டார்.

"ரமேஷ்பாபுதான் 'போகவே விட மாட்டேன்' என்று பிடித்து வைத்துக் கொண்டு விட்டார் என்பேன்."

"நீ போய் அப்படிச் சொல்லி விட்டால் அப்புறம் எனக்கு மண்டகப்படி தான்! அப்புறம் இந்தப் பக்கம் வரவிடாமல் அவள் உன்னைப் பிடித்து வைத்துக் கொண்டு விடுவாள். நானும் உன் வீட்டுப் பக்கம் தலைகாட்ட முடியாது!"

"நான் ஒன்றும் அப்படி 'பெண்டாட்டி யாத்தா, பெரியாத்தா' என்று இருக்கிறவன் இல்லை. அது இருக்கட்டும், நான் தான் அப்ளிகேஷனை எடுத்துக் கொண்டு துரையிடம் போகவேண்டும் என்கிறீர்களோ?" என்று கேட்டான் ரமாநாத்.



"நீ போகாவிட்டால் வேறு யார் போவார்கள்? வீட்டில் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தால் வேலை கிடைத்து விடும் என்று எண்ணமோ? வேலைக்காக எத்தனை பேர் மாதக் கணக்கில் நடைக்கு மேல் நடையாக நடந்து கஷ்டப்படுகிறார்கள், தெரியுமா? எவ்வளவு சிபாரிசுக் கடிதம்! என்ன அலைச்சல்! அப்பப்பா! நினைத்தாலே வயிற்றைப் 'பகீர்' என்கிறது! இந்தக் காலத்திலே வேலை கிடைப்பது என்றால் குதிரைக் கொம்பாக அல்லவா இருக்கிறது!"

"அப்படி யென்றால் எனக்கு வேலை கிடைத்தாற்போலத்தான்! துரையிடம் மனுவை எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்று நீங்கள் சொல்லும் பொழுதே என்னை வெட்கம் பிடுங்கித் தின்கிறது. அவனைப் போய் வேறு காக்காய் பிடித்தாக வேண்டுமாக்கும்! என்ன வேலை வேண்டிக் கிடக்கிறது, போங்கள்! முன்பெல்லாம் எனக்குக் குமாஸ்தா வேலை என்றாலே இழிவாகப் பட்டது. அந்த இழி தொழிலுக்கே தவம் கிடக்கவேண்டும் என்று என் தலையிலும் எழுதி யிருக்கிறாப் போலிருக்கிறது. துரை என்ன கண்டிப்பான பேர்வழியோ?" என்று கேட்டான் ரமாகாந்த்.

"ஆமாம், ரொம்பக் கண்டிப்பான பேர்வழிதான். அவனைக் கண்டாலே, ஆபீஸில் எல்லாருக்கும் சிம்ம ஸ்வப்பனம்!"

"அப்படியானால் நான் வீட்டுக்கே போகிறேன். எனக்கு வேலையும் வேண்டாம், கூலியும் வேண்டாம், போங்கள்!"

"முதல் முதலில் யாருக்குமே அப்படித்தான் இருக்கும். போகப் போக எல்லாம் சரியாகி விடும். உன் வயதில்தான் நானும் வேலைக்கு வந்தேன். கல்யாணம் ஆன புதிது. 'இண்டர்வ்யூ' அன்றைக்கு என் மார்பு எப்படி அடித்துக் கொண்டது, தெரியுமா? வேலைக்காக வந்திருப்பதாகவே எனக்குத் தோன்றவில்லை. எனக்குத் தூக்குத் தண்டனை கிடைத்து விட்டது போன்ற உணர்ச்சிதான் ஏற்பட்டது. இது சகஜம். ஆனால் நான் இருக்கும்பொழுது நீ பயப்படுவானேன்?" என்றார் ரமேஷ்பாபு.

"ஆமாம், நீங்கள் வேலைக்கு வந்து இருபது, இருபத்திரண்டு வருஷம் ஆகியிருக்குமோ?"

"இருபத்திரண்டாகப் போவானேன்? முழுசாக இருபத்தி ஐந்து வருஷம் ஆகிவிட்டது. என் மனைவி செத்துப்போயே இருபது வருஷம் ஆகிவிட்டதே! அப்பொழுது எனக்கு என்ன சம்பளம், தெரியுமா? பத்தே பத்து ரூபாய்தான்!"

"அப்புறம் நீங்கள் ஏன் கல்யாணம் செய்து கொள்ளவில்லை? அப்பொழுது உங்களுக்கு இருபத்தி ஐந்து வயதுக்கு மேல் ஆகியிராதே!" என்றான் ரமாகாந்த்.

ரமேஷ்பாபு சிரித்துக்கொண்டே, "அமிர்தத்தை ருசித்தவன் வேறு எதையாவது புசிப்பானா? அரண்மனைச் சுகத்தை அனுபவித்தவனுக்குக் குடிசை வாழ்வு பிடிக்குமா? நீயே சொல்லு, தூய காதல் ஆத்மாவையே யல்லவா திருப்தியுறச் செய்து விடுகிறது! எனக்கோ இப்பொழுது வயதாகி விட்டது. உன்னிடம் உண்மையைச் சொல்லுகிறேன், அவள் இறந்த பிறகு நான் வேறு பெண்ணைக் கண்ணெடுத்துக் கூடப் பார்த்ததில்லை. எத்தனையோ சொந்தக்காரர்கள் எனக்கு மறு விவாகம் செய்து வைத்துவிட வேண்டும் என்று ஒற்றைக் காலால் நின்று பார்த்தார்கள். நான் 'முடியவே முடியாது'



என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டேன். அவளுடன் வாழ்ந்த காதல் வாழ்க்கை இன்றும் என் மனத்தை விட்டு அகல வில்லை. அப்படியிருக்கும் பொழுது இன்னொரு பெண்ணை மணக்க மனம் வருமா? நீயே சொல்லு!" என்றார்.

இப்படியே ஏதோ பேசியவாறு இருவரும் ஆபீஸை அடைந்தார்கள்.

— பத்தாம் அத்தியாயம் —

திரும்பிய பார்ஸல்

ரமாகாந்த் ஆபீஸிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்தபொழுது மணி மூன்று அடித்து விட்டது. அவன் ஆபீஸில் இருக்கும்பொழுதே வானத்தில் மேகங்கள் குழுமி விட்டன. மழை 'இதோ வந்து விட்டேன்' என்று பயமுறுத்திக் கொண்டிருந்தது. ஆனால் ரமாகாந்துக்கு அங்கே இருப்புக் கொள்ளவில்லை; வீட்டுக்குப் புறப்பட்டு விட்டான். அவன் ஆபீஸ் கட்டிடத்தின் காம்பவுண்டைத் தாண்டுவதற்குள்ளேயே மழை 'சோ' என்ற இரைச்சலுடன் பெய்ய ஆரம்பித்து விட்டது. ஆடி மாதத்து முதற் கோப்பு மழையாகையால் ஒரே நிமிஷத்தில் அவனைச் சொட்ட நனைத்து விட்டது. 'மழைக்கு எங்கேயாவது ஒண்டிக் கொள்ளுவோம்; நின்ற பிறகு போவோம்' என்ற எண்ணமே அவனுக்கு உதிக்கவில்லை. 'வேலை கிடைத்து விட்டது' என்ற சந்தோஷச் செய்தியை வீட்டாருக்குச் சொல்லப் போகும்பொழுது, இந்த மழைக்குப் பயந்தால் முடியுமா? ஆகவே, அவன் மழையைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். மாதச் சம்பளம் முப்பது ரூபாய்தான். இருந்தாலும் மேல் வரும்படி வரக்கூடிய இடம். 'மாதம் ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் வீதம் மிச்சம் பிடித்தால், எத்தனை மாதத்துக்குள் பத்மாவுக்குச் சந்திரஹாரம் செய்து போட முடியும்? ஐந்து வருஷங்களுக்குள், மாதம் ஐம்பது—அறுபது என்று மிச்சம் பிடித்தால் அவளுக்கு என்ன என்ன நகைகள் எல்லாம் செய்து போடலாம்? என்ன என்ன நகை, என்ன என்ன விலையிருக்கும்?' என்றெல்லாம் அவன் மனத்துக்குள்ளேயே கோட்டை கட்டலானான். வீட்டுக்கு வந்ததும் ஈரத் துணிகளைக் கூடக் களையாமல், நேரே பத்மாவின் அறையை அடைந்தான். பத்மா அவனைப் பார்த்து விட்டு, "கொட்டும் மழையில் இப்படிச் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டு வருவானேன்? மழை நின்ற பிறகு வந்திருக்கக் கூடாதோ?—ஆமாம், நேற்று ராத்திரி பூராவும் எங்கேயிருந்தீர்களாம்?" என்று கேட்டாள்.

"வேலை விஷயமாகத்தான் போனேன். அதனால்தான் நேற்று ராத்திரி போன இடத்திலேயே தங்கும்படி யாகிவிட்டது. நல்ல வேளையாக முனிஸிபாலிடியில் இன்று முதல் வேலை கிடைத்து விட்டது" என்றான் ரமாகாந்த்.

பத்மா வெகு சந்தோஷத்துடன், "நிஜமாகவா? என்ன சம்பளம்?" என்று கேட்டாள்.

ரமாகாந்துக்கு 'முப்பது ரூபாய்' என்று சொல்லச் சிறிது வெட்கமாயிருந்தது. 'பூ! இவ்வளவுதானா?' என்று அவள் துச்சமாக எண்ணி விட்டால்—?' என்ற பயம் அவனுக்கு. ஆகையால், "ஆரம்பத்திலே நாற்பது ரூபாய்தான் தருவார்களாம்.

போகப் போகச் சம்பளம் அதிகமாகுமாம். மேல் வரும்படிக்கு வேறு இடம் இருக்கிறதாம்!'' என்றான்.

பத்மா 'அவனுக்கு அதை விட நல்ல வேலையாகக் கிடைக்கும்' என்று மனக் கோட்டை கட்டிக் கொண்டிருந்தாள். இதைக் கேட்டவுடன், "நாற்பது ரூபாய் தானா? நான் அறுபது—எழுபது கிடைக்கும் என்றல்லவா எண்ணிக் கொண்டிருந்தேன்!'' என்றாள்.

"நூறு ரூபாய் வேலை வேண்டும் என்றாலும் கிடைத்திருக்கும். ஆனால் நமக்குப் பணமா முக்கியம்? மரியாதை, மட்டு வேண்டாமோ? அதனால்தான் ரொம்ப யோசனைக்குப் பிறகு, இந்த வேலையை ஒத்துக் கொண்டேன். சம்பளத்துக்குப் பதிலாகத்தான் ஐம்பது—அறுபது மேல் வரும்படி கிடைத்துவிடப் போகிறதே!''

"மேல் வரும்படியும் ஆயிற்று, கீழ் வரும்படியும் ஆயிற்று! ஏழைகளிடமிருந்து லஞ்சம் வாங்கியா நாம் வயிறு வளர்க்க வேண்டும்? போதும், போங்கள்!''

"ஏழைகள் நம்மிடம் எதற்காக வருகிறார்கள்? கொழுத்த பணக்கார வியாபாரிகள்தான் வருவார்கள். நான் 'பணம் கொடு' என்று அவர்களை எதற்காகக் கேட்கப் போகிறேன்? அவர்களாகவே தங்கள் வேலை சீக்கிரம் ஆகவேண்டுமே என்பதற்காகக் கொண்டு வந்து கொடுப்பார்கள். அப்படிக் கொடுக்கவில்லை என்றால் எவ்வளவு பெரிய பணக்காரனாகத்தான் இருக்கட்டுமே, நான் பூராவும் வாசலிலேயே நிறுத்தி வைத்துக் கஷ்டப் படுத்திவிட மாட்டேனா? வியாபாரிகளுக்கு ஒவ்வொரு நிமிஷமும் பணம் வரக் கூடியதல்லவா? ஆகையால் தன் காரியத்தைச் சீக்கிரம் முடித்துக் கொள்ள 'நீ மூர்த்தி, நான் மூர்த்தி' என்று பணத்தைக் கொண்டு வந்து கொடுப்பார்களாக்கும்!'' என்று சொல்லியவாறே ரமாநாத் சிரித்தான்.

பத்மா அவன் வார்த்தைகளில் திருப்தி அடைந்து, "அப்படியானால் சரி. யாராவது ஏழைகள் வந்தால் அவர்களிடமிருந்து காசு வாங்கிக் கொள்ளாமலேயே காரியத்தைச் செய்துகொடுங்கள். என்ன?'' என்றாள்.

"எனக்குத் தெரியாதா? நான் ஏழைகளிடம் காசு பறிப்பேனா? சொல்லு!''


"வேலை கிடைத்த செய்தியை இன்னும் நீங்கள் அம்மாவிடம் சொல்லவில்லையே! போய்ச் சொல்லி விட்டு வாருங்கள்!''

"இதோ போகிறேன். ஆனால் உன்னிடம் ஒரு செய்தி; அவர்களிடம் 'எனக்குச் சம்பளம் இருபது ரூபாய்தான்' என்று சொல்லப் போகிறேன். நீ எங்கேயாவது பேச்சு வாக்கில் உண்மையை உளறிக் கொட்டி விடாதே!''

பத்மா வதனத்தில் மகிழ்ச்சிக் குறி தாண்டவமாட, "என்னைக் கேட்டால் இருபது என்றுகூடச் சொல்ல வேண்டாம். பதினைந்து என்று சொன்னால் போதுமானது என்று தோன்றுகிறது. ஆனால் மேல் வரும்படியைப் பற்றி அவர்களிடம் தப்பித் தவறிக்கூட வாய் திறந்து விடாதீர்கள். நான் பணம் சேர்த்த பிறகு 'சந்திரஹாரம்' வாங்கிக் கொள்ளப் போகிறேனாக்கும்!'' என்றாள்.

இதே சமயம் வாசலில் தபால்காரன், 'ஸார்' என்று குரல் கொடுத்தான். ரமாநாத் எழுந்து போய்ப் பார்த்தான். அவனது பெயரில் தீனதயாள்பாபு அனுப்பி யிருந்த பார்ஸல் ஒன்று வந்திருந்தது. அதை வாங்கிக் கொண்டு, வதனத்தில் சந்தோஷம் தாண்டவமாட உயரே சென்றான். அதைப் பத்மாவின் கையில் கொடுத்து, "உன் அப்பா அனுப்பி யிருக்கிறார். உள்ளே என்ன இருக்கிறது என்று பிரித்துப் பார்!'' என்றான்.

பத்மா ஒரு கத்திரிக் கோலை எடுத்து வந்து கயிற்றை அறுத்துப் பார்ஸலைப் பிரித்தாள். உள்ளே சின்ன தேவதாருப் பெட்டி யொன்றில் 'சந்திரஹாரம்' வைத்திருந்தது. ரமாநாத் அதைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு, "உன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! நீ சொல்லி வாய் மூடுவதற்கு முன்னாலேயே உனக்குச் சந்திர



மனைவி:—அந்தப் பரியாரியைக் கொஞ்சம் கருவேப்பிலை எடுத்துக் கொண்டு போகச் சொன்னீர்களோ, இல்லையோ! அங்கே போய்ப் பாருங்கோ, அவன் உங்கள் தலையைப் போலவே மரத்தையும் மொட்டை யடிச்சுட்டுப் போய்விட்டான்!

ஹாரம் கிடைத்துவிட்டது, பார்த்தாயா?" என்றான்.

பத்மா சிறிது கம்மிய குரலில், "இது என்ன இது? என்றைக்கும் இல்லாத திருநாளாய்த் 'திடுதிப்' பென்று இன்றைக்கு இதை அம்மா எனக்கு அனுப்பி வைத்திருக்கிறாளே! வேடிக்கையாக வல்லவா இருக்கிறது! அவளுடையது ஒன்றுமே எனக்கு வேண்டாம். தபாலுக்கு நேரம் இருந்தால் இதை இன்றைக்கே திருப்பி யனுப்பி விடுங்கள்!" என்றாள்.

இதைக் கேட்ட ரமாநாத் ஆச்சரியத்துடன், "திருப்பி யனுப்பினால் அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்களா?" என்று கேட்டான்.

பத்மா முகத்தைச் சிணுங்கிக் கொண்டு, "கோபித்துக் கொண்டால் கோபித்துக் கொள்ளட்டுமே! அவர்களுடைய கோபம் என்னை என்ன செய்துவிடும்? இன்று கொடுக்கிறவள் கல்யாணத்தின் பொழுதே கொடுக்கிறதுதானே? இவ்வளவு நாள் கழித்து எப்படித்தான் அவளுக்கு இவ்வளவு கரிசனம் காட்டத் தோன்றிற்றோ, தெரியவில்லை. நீங்கள் மனசு வைத்தால் எனக்கு வேண்டிய நகை கிடைத்து விட்டுப் போகிறது! இனிமேல் அவளுடைய தயவு எனக்கு எதற்கு? இப்பொழுதே இதைத் திருப்பி யனுப்பிவிடுங்கள்! நான் ஒன்றும் அவளுடைய நகைக்காகத் தவம் கிடக்கவில்லை!" என்றாள்.

ரமாநாத் அவளைச் சமாதானப் படுத்த எண்ணி, "அவர்கள் உனக்கென்று அனுப்பி யிருப்பதைத் திருப்பி யனுப்பினால் மனவருத்தப் படமாட்டார்களா? நீயே யோசித்துப் பார். பார்க்கப் போனால் அவர்கள் கல்யாணத்தின் போதே கொடுக்காமல் இருந்தது நல்லதாயிற்று. இல்லாவிட்டால் இதுவும் எல்லா நகைகளுடன் சேர்ந்து திருட்டுப் போயிருக்குமோ, இல்லையோ?" என்றான்.

"என்னவா யிருந்தாலும் சரி, நான் இதை எடுத்துக் கொள்ளப் போவதில்லை!"

"ஏன்?"

"என் இஷ்டம்."

"என் இஷ்டம் என்று சொன்னால் சரியாய் விடுமா? ஏதாவது சரியான காரணத்தைச் சொல்லு, நான் ஒத்துக் கொள்ளுகிறேன்."

"என் அம்மாவின் சுபாவம் எனக்குத் தெரியும். அவள் ஒருக்காலும் இதை மனம் ஒப்பிக் கொடுத்திருக்க மாட்டாள். ஊர் வாய்க்குப் பயந்தோ, அல்லது பெண்ணுக்கு



கனபாடிகள்:— என்ன, சாஸ்திரிகளே! வெய்யில் தாங்கல்லே! இந்த ஸீஸன்லே கல்யாணம் பண்றவா கோடைக்கானலிலோ ஊட்டியிலோ பண்ணப்படாதோ? அப்படிப் பண்ணினால் நாமும் கொஞ்ச நாள் அங்கெல்லாம் 'ஜம்'மென்று இருந்து விட்டு வரலாமோ இல்லையோ!

ஏதாவது செய்ய வேண்டுமே என்ற கடனுக்காகவோதான் இதை அனுப்பியிருக்க வேண்டும். அதனால்தான் நான் இதை எடுத்துக் கொள்ள முடியாது என்கிறேன்" என்றாள் பத்மா.

பத்மாவுக்குத் தன் தாயாரின் மீது ஏற்பட்டிருக்கும் துவேஷத்தைக் கண்ணுற்ற ரமாநாத் வாய் திறந்து பேச வில்லை; தர்க்கத்தையும் பிரமாணத்தையும் கொண்டு, துவேஷத்தை அகற்ற முடியாது என்பதை அவன் நன்கு உணர்ந்திருந்தான். பத்மா அவனுடைய கையிலிருந்த சந்திரஹாரத்தை வாங்கி, அது வந்திருந்த அதே பெட்டியில் வைத்து மூடி, அதன் மேல் துணியைச் சுற்றித் தைக்கலானாள். இதைக் கண்ட ரமாநாத், 'கடைசி முறையாக ஒரு தடவை அவளிடம் சொல்லிப் பார்ப்போம்' என்ற எண்ணத்தில் சற்றுப் பயந்தவாறே, "அனுப்புவதற்கு இப்பொழுதே என்ன அவசரம்? நாலைந்து நாள் கழித்துச் சாவகாசமாக அனுப்பினால் போச்சு!" என்றான்.


பத்மா அவனை விழுங்கிவிடுபவள் போல் பார்த்து, 'அதெல்லாம் கூடாது! இப்பொழுதே அனுப்பிவிட வேண்டும். அப்புறம் ஆறின கஞ்சி பழங் கஞ்சிதான்! இதோ தைத்துத் தந்துவிடுகிறேன். கையோடு கையாகத் தபாலாபீஸுக்குப் போய் விட்டு வந்து விடுங்கள்!" என்றாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் ரமாநாத் கவலை தோய்ந்த முகத்துடன், பார்ஸலும் கையுமாகக் கீழே இறங்கினான். (தொடரும்)

புதிய

கரும்புச்
சர்க்கரை . . .

புதிய கரும்புச் சர்க்கரையும், சுத்தமான க்ளுகோஸுமே தின் பண்டங்கள் தயாரிப்புக்கு வேண்டிய மிக முக்கியமான பொருள்கள். மிகவும் நேர்த்தியான, முற்றிலும் சுத்தமான சர்க்கரையையும், க்ளுகோஸையும் கொண்டே ஸாவரின் ஸ்வீட்ஸ் தயாரிக்கப்படுகிறது. கலையைப்பற்றி நாங்கள் சொல்லவேண்டுமா! நாங்கள் தயாரிக்கும் பல நிறுவகளின் வெற்றியை நீங்களே ருசி பார்க்க வேண்டுகிறோம். எங்கள் தின் பண்டங்கள் எல்லாம் மிக மதுரம் என்று பல்லாயிரக் கணக்கான சிறுவர் - சிறுமியர் சொல்லுகிறார்கள் அவர்களுக்குத் தெரியாததா!



தேசத்தினர்
தேர்ந்தெடுத்தது



ஸாவரின்
ஸ்வீட்ஸ்

K. C. P. தயாரிப்பு

நீண்ட கருத்த கூந்தல் வளர



கோகுல் ஹேர் ஆயில்

தயாரிப்பவர்கள் :

டி. எஸ். ஆர். & கோ.,

வாஸனை திரவிய வியாபாரிகள்
கும்பகோணம்

மதராஸ் வீடி ஏஜண்டுகள் :
மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

கோயமுத்தூருக்கும் பாலக்காடுக்கும்
சோல் ஏஜண்டு :

B. பாலபட்டாபி,
வைசியாள் தெரு, கோயமுத்தூர்


உலகில்
மிகச் சிறந்த
பௌண்டன்பேனா

ஏனென்றால் எல்லா சீதோஷ்ண ஸ்திதியிலும் தன்மையை இழக்காமலிருக்க விசேஷமாக ப்ளாட்டினம் தோய்க்கப்பட்டிருக்கிறது—உறுதிக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஏனென்றால், உலகத்தின் கோடிக் கணக்கானவர்களுக்கு இருபத்தைந்து வருஷங்களாக ப்ளாட்டினத்தின் மேலே ஒரு விசேஷ மோஸ்தர் ஏற்பட்டிருக்கிறது.

ஏனென்றால், கெடுவதற்கு ஆதாரமே இல்லாமல், எந்த விதமான மசியினாலும் நன்றாக எழுதக் கூடியது.

ஏனென்றால், இந்த ஏற்றமான விலையிலும் உலகில் அதிகமாக வாங்கி வழங்கப்படுகிறது.



விலை
ரூ. 3/1

GOLDEN
Platignum

கோல்டன்
ப்ளாட்டினம்

இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டது
வியாபார விபரங்களுக்கு கீழ்க்கண்ட
பூரண உரிமையாளர்களுக்கு எழுதவும்:

மூல்லர் & பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்
குவீன்ஸ் மான்ஷன்ஸ்
பாஸ்டியன் ரோடு, பம்பாய்

Ad. No. PI-R



பிஸ்மாக் சாப்பிடுவதில் அசிரத்தை வேண்டாம்

அதைச் சாப்பிட பயப்படுகிறீர்களா? மந்த உணர்ச்சி, அஜீர்ணம் மற்றும் இதர வயிற்றுக் கோளாறுகளினால் நீங்கள் அவஸ்தைப் பட்டால்—ஒவ்வொரு நடவையும் போஜனத்திற்குப் பின் பிஸ்மாக் சாப்பிடுங்கள். அந்த உபாதைகள் சீக்கிரம் நீங்கிவிடும்.

பிஸ்மாக் (பைகரேட் மக்னீஷியா) மாத்திரையாகவோ, பௌடராகவோ சாப்பிட வெகு சுகமாயிருக்கும். அதுவுமல்லாமல் வயிற்றுக் கோளாறுகளை யெல்லாம் உடனடியாக நிவர்த்தி செய்கிறது.

உபயோகமற்ற போலிகளை வாங்காதீர்கள்! பிஸ்மாக் கட்டு கொண்டு நல்ல ஜீரண சக்தி அடையுங்கள். மாத்திரையாகவும் பௌடராகவும் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.



BISMAG

இந்தியாவுக்கு பூரண விநியோகஸ்தர்கள்:
ஜியோப்ரே மானர்ஸ் & கம்பெனி லிமிடெட்
பம்பாய், கல்கத்தா, சென்னை, லாகூர்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras.

கல்கி



KALKI ஜூன் 1, 1947 4 அணா

REGD. No. M. 4392

License No. 18
Licensed to post without prepayment

